Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 29, 2024

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 29, 2024 | ஒளி: 10 கதிர்: 081 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE




# “குட்டி மான்களை அடித்து துரத்தவும்”

## சுமந்திரன் தெரிவிப்பு; டக்ளஸ், பிள்ளையான், கருணா, வியாழேந்திரன் யாரோடு ஒன்றாக இருப்பது என கேட்கிறார்

■ நிதர்ஷன் வினோத்

ஓர் ஆன்மீக வாதி போல, தென்பட்ட ஒருவரை நாங்கள் வலிந்து கொண்டு வந்தோம். அவர், யாழ்ப்பாணத்தில் பெட்டி படுக்கையுடன் ஓடி விட்டார். எனினும், குட்டிமான்களை விட்டுவிட்டு ஓடி விட்டார். அந்த மான்களை அடித்து துரத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# முட்டை விலை குறைந்தது

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை முட்டை வியாபாரிகள் சங்கத்தின், திங்கட்கிழமை(28) அறிக்கையின்படி சந்தையில் சிவப்பு முட்டை ஒன்றின் விலை ரூ.36 ஆகும். இதேவேளை, வெள்ளை முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக பதிவாகியுள்ளது.

சிவப்பு மற்றும் வெள்ளை முட்டை ஒன்றின் விலை முறையே ரூ.42 மற்றும் 41 ஆக கடந்த வாரம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காத்திருந்த மூவர் கைது



வென்னப்புவ பிரதேசத்தில் இஸ்ரேலிய பெண்கள் மூவர் தங்கியிருந்த விடுதி ஒன்றிற்கு அருகாமையில் உள்ள கடற்கரைக்கு, வேனில் வந்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொண்ட இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# “பின்னடைவு ஏற்படும்”




■ எஸ்.கணேசன்

தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதை எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுகின்றன. இதே நிலை பாராளுமன்ற தேர்தலிலும் ஏற்படும் என மலையக மக்கள் முன்னணி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத்தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# “முன்னாள் ஜனாதிபதிகளின் வரபிரசாதங்களை நீக்குவேன்”

## இந்நாள் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் ஏதுவாக இருந்தாலும், முற்றாக நீக்கப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மீண்டும் உறுதியளித்துள்ளார்.

காலி, பத்தேகம பிரதேசத்தில், ஞாயிற்றுக்கிழமை 927) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளைக் கவனிப்பது மக்களின் கடமையல்ல. சுற்றறிக்கைகள், பாராளுமன்ற சட்டம் மற்றும் அரசியலமைப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அவ்வாறான வரப்பிரசாதங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

மட்டக்களப்பில்

# “3 ஆசனங்களை கைப்பற்றுவோம்”



■ வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நாங்கள் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று மூன்று ஆசனங்களை எமது கட்சி நிச்சயமாகக் கைப்பற்றும் எமது சிந்தனையும் இதுதான் எமது கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் பணிப்பாகும் தேசிய மக்கள் சக்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் இளையதம்பி தவஞானசூரியம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# “தேர்தல் வாக்குறுதிகளை ஜனாதிபதி மீறியுள்ளார்”

நிர்க்கதிகளுக்கு மத்தியில் தமது வாழ்க்கையை நடத்தி வரும் மக்களுக்குத் தேர்தலில் வாக்குறுதியளித்தபடி மக்கள் எதிர்கொண்டு வரும் அழுத்தங்களைக் குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உறுதியளித்தது.

என்றாலும், இந்த மாற்றங்களைச் செய்ய முடியாத ஜே.வி.பிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை வழங்காதீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



2016ஆம் ஆண்டு இடம்பெற்ற போராட்டத்தின் போது, பொதுமக்களுக்கும் சாதாரண போக்குவரத்திற்கும் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு திங்கட்கிழமை (28) ஒத்திவைக்கப்பட்டது. சுகயீனம் காரணமாக அவர் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரவன்ச வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதால், திட்டமிடப்பட்ட விசாரணைக்கு ஆஜராக முடியாமல் போனதாக அவரது வழக்கறிஞர் குழு நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தது.

தொடர்ச்சி P2



# முதலாவது நீர் விநியோகம்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் 2024 மற்றும் 2025ஆம் ஆண்டிற்கான பெரும் போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகமானது திங்கட்கிழமை (28) காலை 10.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# “ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை”

எதிர்கால பாராளுமன்றத்திற்கு மக்கள் தம்மைத் தெரிவு செய்தால் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணையைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் ஆகிய இரண்டு பணிகளையும் தாம் மேற்கொள்வேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள்

# “சமூகத்துக்காக போராடவில்லை”

■ ஏ.எச்.ஹஸ்பர்

சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் என கடந்த காலங்களில் தங்களை இனங்காட்டிக் கொண்டவர்கள், முஸ்லிம்களின் பிரச்சினைகளின் போது குரல் கொடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் எம்.பியுமான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா மஹ்ரூப் நகர்ப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “குட்டி மான்களை அடித்து துரத்தவும்”

வடமராட்சியில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களின் பலமான ஓர் அரசியல் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அவ்வாறு ஒற்றுமையாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி முதலில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

இந்தக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் ஒற்றுமையாகப் பலமான அமைப்பாகக் கூட்டமைப்பு செயற்பட்டு வந்தது.

இந்தக் கூட்டமைப்பிலிருந்த கட்சிகளுக்கிடையில் அடுத்த தேர்தலில் ஏற்பட்ட ஆசனப் பங்கீட்டுப் பிரச்சனையினால் இதிலிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 2010இல் வெளியேறியது.

ஆனால், அடுத்த வருடத்திலேயே கூட்டமைப்பிற்குள் வருவதற்குப் பலர் விரும்பினார்கள். அதற்கமைய அவர்களில் நேர்முகப் பரீட்சை வைத்து இரண்டே இரண்டு கட்சிகளை உள்வாங்கினோம். அதில் ஒன்று சித்தார்த்தன் தலைமையிலான புளொட் மற்றும் திரும்பவும் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியை உள்வாங்கிக் கொண்டோம்.

அப்படியாகத் தான் 2011இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் 2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலிலும் முகங்கொடுத்தோம். இந்த மாகாண சபைத் தேர்தலில் இரண்டு போனஸ் ஆசனங்கள் எமக்குக் கிடைக்கப்பெற்ற போது அதிலே ஒன்றை தமக்குத் தர வேண்டுமெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிய போதும் அது தமக்கு கிடைக்காததால் இந்த கூட்டமைப்பிலிருந்து மீண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி விலகிச் சென்றது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிடைத்த இரண்டு போனஸ் ஆசனங்களில் ஒன்று தனக்குத் தரவில்லை என்ற காரணத்தினாலே ஈ.பி.ஆர்.எல்.எப். விலகிப் போனது.

இப்படியாக ஆசனப்பங்கீடு அல்லது போனஸ் ஆசனம் அல்லது தேசியப்பட்டியல் ஆசனம் என்பவை தமக்குக் கிடைக்கவில்லை என்பதால் தான் கூட்டமைப்பிலிருந்த கட்சிகள் பலவும் விலகிப் போயின. ஆனால், எவரையும் நாங்கள் துரத்தவில்லை. வெளியே போகவும் சொல்லவில்லை.

இவ்வாறாக ஆசனப் பங்கீடு மற்றும் போனஸ் ஆசனங்களுக்காக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நிலையிலும் புளொட் மற்றும் ரெலோ தொடர்ந்தும் கூட்டமைப்பிலிருந்து வந்தது.

ஆனால், கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் காலத்திலே தமிழரசுக் கட்சி தனித்துப் போகப் போவதற்கு முடிவெடுத்ததாக ஒரு பொய்யான பரப்புரையொன்று செய்யப்பட்டது. அது அந்த தேர்தல் முறையிலே இருந்த ஒரு விடயம். ஆக எங்களுக்குள்ளேயே இருக்கிற கட்சிகள், ஆசனங்களை வைத்திருந்தால் நாங்கள் சேர்ந்தே அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியும் என்பது தான் எங்களது அடிப்படையாக இருந்தது. அது தான் அந்த எண்ணக்கருவாகும்.

இந்த குழப்பத்திற்குக் கட்சி முடிவுகளை அரைகுறையாக வெளியிடும் ஊடகங்களுக்கும் பெரிய பொறுப்பு உள்ளது. இன்றைக்குப் பல ஊடகங்களுக்கு இந்த சிறிய நுண்ணிய வித்தியாசங்கள் புரிவதில்லை. அவர்கள் தாமாகவே கட்சி முடிவு என்பது போல, தமிழரசு தனிவழி செல்ல தீர்மானம் என எழுதி விட்டார்கள்.

ஆக! ஊடகங்கள் சொல்வதை நம்பி நாங்கள் சொல்வதை நம்பாமல் நீங்கள் தானே தனிவழி என ஏற்கனவே தீர்மானித்து விட்டீர்கள் என்பதால் நாங்கள் தனித்துத் தான் போவோம் என்று கூறினார்கள்.

ஆனாலும், ஒற்றுமை என்கிற ஏக்கம் எங்கள் மக்கள் மனங்களிலே இருக்கிறது. அது தவறான ஓர் ஏக்கம் அல்ல. நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால், யாரோடு ஒன்றாக இருப்பது என்பதில் பெரிய கேள்வி இருக்கிறது.

அது டக்ளசோடு ஒன்றாக இருக்கலாமா? பிள்ளையானோடு ஒன்றாக இருக்கலாமா? கருணாவோடு ஒன்றாக இருக்கலாமா? கட்சியை விட்டு கட்சி தாவுகிற வியாழேந்திரனோடு ஒன்றாக இருக்கலாமா? அப்ப யாரோடு ஒன்றாக இருப்பது என்பது தான் கேள்வியாக உள்ளது.

மக்களுடைய எதிர்பார்ப்பு காரணமாக நாங்கள் கண்டதையும் சேர்த்து வைத்திருந்த ஒரு காலம் இருந்தது தான். இவ்வாறான நிலையில் நெற்றியில் பட்டை அணிந்து சிவப்பு பொட்டு வைத்து ஓர் ஆன்மீக வாதி போல, தென்பட்ட ஒருவரை நாங்கள் வலிந்து கொண்டு வந்து ( இதற்காகப் பல தடவைகள் மக்களிடம் மன்னிப்பு கூட்டிருக்கிறேன்) முதல்வராக நிறுத்தினோம்.

இன்றைக்குப் பெண்களுக்கு சாராய லைசன்ஸ்க்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட்டு பெட்டி படுக்கையோடு யாழ்ப்பாணத்தை விட்டே இவர் போய் விட்டார். ஆனால், போனவர் தன்னுடைய கட்சியையும் கூட்டிக் கொண்டு போயிருக்க வேண்டும்.

ஆனால், அப்படிச் செய்யாமல் சில குட்டி மான்களை விட்டுவிட்டுப் போயிருக்கிறார். சில மான் குட்டிகளை நீங்கள் கேளுங்கள் நான் ஒளிந்து இருக்கிறேன் என்று கூறி இப்போது ஒளிந்திருக்கிறார்.

ஆகவே, வாக்காளர்களாகிய நீங்கள் அவர் விட்டுப் போன அந்த குட்டி மான்களை நீங்கள் அடித்துத் துரத்த வேண்டும். அது எப்படியான கட்சி என்று அனைவரும் முதலில் பார்க்க வேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் பிரித்தவனுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்தது என்பதைக் காண்பிக்க வேண்டும். வடக்கும் கிழக்கும் இணைந்தாக போவதாக இருந்தால் இலங்கை தமிழரசுக் கட்சியால் மட்டும் தான் இது முடியும் என்றார்.

## காத்திருந்த மூவர் கைது



இந்த சந்தேக நபர்கள் மூவரும் காரணமின்றி பல மணி நேரம் கடற்கரையிலேயே காத்திருந்ததாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் வியாழக்கிழமை(24) நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் பேசாலை பகுதியைச் சேர்ந்த 18, 20 மற்றும் 27 வயதுடையவர்களாவர். இவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## “பின்னடைவு ஏற்படும்”

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுவாக இலங்கை அரசியலில் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து அதில் வெற்றிபெறும் ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சி அடுத்து வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் பாரியளவில் வெற்றி பெறுவதை நாம் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம்.

ஆனால், ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறமுடியாமல் இருக்கிற ஒரு நிலைமை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

அதற்குக் காரணம் இந்த ஜனாதிபதியின் மீதும், அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பது காட்டுகிறது.

ஜனாதிபதி எதிர்க்கட்சியில் இருந்த போது, தான் பதவிக்கு வந்தால் 48 மணித்தியாலத்தில் பல மாற்றங்கள் செய்வதாகக் கூறினார். பல அதிசயங்கள் செய்யக்கூடிய திறமை என்னிடமும் தனது குழுவினரிடமும் இருப்பதாகக் கூறினார். ஆனால், இப்பொழுது நான் மந்திரவாதியோ, தந்திரவாதியோ இல்லை என கூறுகிறார்.

இதுதான் உண்மையான நிலைமை பதவிக்கு வருவதற்கு முன்பும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், நாற்காலியில் அமர்ந்தவுடன் தான் கூறியதை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அப்பொழுது தான் புரிந்து கொள்ள முடியும். எனவே, செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம் நிதானமாகச் சிந்தித்து மக்களிடம் கூற வேண்டும்.

அதனையே ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும், ஏனைய அங்கத்தவர்களும் செய்கிறார்கள். இதனடிப்படையில், நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிகளைக் கொண்டு புதிய அரசாங்கத்தை அமைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## “தேர்தல் வாக்குறுதிகளை...

ஐக்கிய மக்கள் சக்திக்கு அந்த பெரும்பான்மை வழங்கப்பட வேண்டும். இது தான் நாட்டிற்குப் பொருத்தமான தெரிவாக இருக்கும். ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் அனுரகுமார திசாநாயக்க கூறியது போல், அதிகாரத்திற்கு வந்தும் நேரடி மற்றும் மறைமுக வரிகளை அவரால் குறைக்கமுடியாது போயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன்படிக்கையை மாற்றியமைப்பேன் என்று தெரிவித்தார். என்ற போதிலும், அவரால் இன்று மாற்றியமைக்க முடியவில்லை என்றார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு கொழும்பு-கொலன்னாவ கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று கொலன்னாவ பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை(27) இடம்பெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு, தேங்காய்களுக்கு வரிசையும் காணப்படுகின்றன.

2028 முதல் கடனை அடைப்பதாக முன்னாள் ஜனாதிபதி நாட்டையே சிக்கலில் தள்ளியுள்ளார்.

இதற்கு இன்னும் நான்கு வருடங்கள் மட்டுமே உள்ளது.

தற்போதைய பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு இந்த கடனை செலுத்த முடியாது.

இதற்கு விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியமாகும். இந்தக் கடனை திருப்பிச் செலுத்த, பெரும்பான்மையான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் 2028இல் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும்

IMF உடன் பேச்சுவார்த்தை நடத்தி மக்களுக்கு ஏற்ற இணக்கப்பாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியால் கையெழுத்திடலாம். வரிசை யுகத்திற்குப் பதிலாக அபிவிருத்தி யுகத்தை உருவாக்கும் நாட்டை ஐக்கிய மக்கள் சக்தியால் கட்டியெழுப்ப முடியும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் எஸ்.எம்.மரிக்காரினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## “முன்னாள் ஜனாதிபதிகளின்...

“சுற்றறிக்கைகள் மற்றும் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம், அதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

“இப்படி ஒரு நாட்டை நாங்கள் நடத்த முடியாது. 163 மெய்க்காவலர்கள், அம்பியூலன்ஸ், ஜீப், கார் போன்றவற்றைக் கேட்கிறார்கள். 17 அல்லது 18 BMW வாகனங்களைக் கோருகிறார்கள். இந்த வசதிகள் அனைத்தையும் இல்லாமல் செய்வோம். அரசியல் என்பது மக்களுக்குச் செய்யும் சேவை ஆகும். அதிமேதகு, மேதகு என்ற பதங்கள் யாவும் சேவையைச் செய்வதற்கான பதங்களாகும்” என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## “3 ஆசனங்களை...

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் ஞாயிற்றுக்கிழமை(27) நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், எமது கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான அனுரகுமார திசாநாயகவின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்றத் தேர்தலில் நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாங்கள் பெரும் வெற்றி அடைந்து ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதோடு, நாட்டின் எதிர்கால நலனுக்கான சகல திட்டங்களும் அழகான, நாடு வளமான பிரதேசம், ஒருமைப்பாடு, சமத்துவம், என்ற அடிப்படையில், ஜனாதிபதியின் கொள்கைகளுக்கு ஏற்ப நாங்களும் மக்களின் சேவகனாக இருந்து இந்த நாட்டை கட்டி எழுப்பி ஒரு சிறந்த நாடாகவும் சிங்கப்பூரை விடச் சிறந்த நாடாகவும் அழகான நாடாகவும் அமைப்பதற்கு எங்கள் தலைவரின் அனுசரணையுடன் நாங்கள் பின்பற்றிச் செல்வோம் என்றார்.

பெரும்பான்மையான வாக்குகளைப்பெற்று அதாவது ஆகக் கூடிய 176 ஆசனங்களைப் பெற்று அரசாங்கத்தை எமது கட்சி அமைக்கும். அதற்கு எமது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அந்த வகையில் நாங்களும் எமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஊக்கத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மக்களும் அதற்கான ஆதரவுகளை வழங்கி எங்களை உற்சாகப் படுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் இருக்கிறோம். இப்பகுதி மக்களின் சேவையே மகேசன் சேவை எங்களது சேவையை மக்கள் சேவை. மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை நாங்கள் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப்பெற்று மூன்று ஆசனங்களை எமது கட்சி நிச்சயமாகக் கைப்பற்றும் எமது சிந்தனையும் தான் எமது கட்சியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் பணிப்பாகும் என்றார்.

## விமலுக்கு எதிரான...

கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே வழக்கு விசாரணையை நவம்பர் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். வழக்கின் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் சாட்சிகளையும் அடுத்த விசாரணைத் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது.

2016 ஆம் ஆண்டு பௌத்தலோக மாவத்தையில் பிரதான வீதிகளை மறித்து பொதுமக்களுக்கும் சாதாரண போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்திய போராட்டத்திற்குத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் ஐவர் தலைமைத்துவம் வழங்கியதாக கறுவாத்தோட்ட பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2016 பெப்ரவரி 6, அன்று, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் செய்த் ராத் அல் ஹுசைனின் வருகைக்கு எதிராகத் தேசிய சுதந்திர முன்னணி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர, வீரகுமார திசாநாயக்க, பியசிறி விஜேநாயக்க, ரொஜர் செனவிரத்ன, மொஹமட் முஸம்மில் மற்றும் டொன் லூசியன் உள்ளிட்ட 6 சந்தேகநபர்கள் இந்த வழக்கில் சந்தேகநபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர். ஏழாவது சந்தேகநபரான சமிந்த ஜெயலால் நீதிமன்றத்தை ஏய்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாவது நீர் விநியோகம்



பெரும் போகத்திற்கு 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட உள்ள நிலையில் நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாணத்தில் 2ஆவது பெரிய குளமான முருகன் கட்டுக்கரை குளம் பெரிய உடைப்பு துருசு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வ மத தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நீர்ப்பாசன பணிப்பாளர் , முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர், அரசாங்க திணைக்கள அதிகாரிகள் வாய்க்கால் அமைப்பு பிரதிநிதிகள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது கட்டுக்கரை குளத்தில் 8.3 அடி நீர் காணப்படுகிறது. மேலும் கட்டுக்கரை குளத்திற்கு நீர்வரத்து காணப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய முதலாவது நீர் விநியோகமானது இடம்பெற்றுள்ளது.

## “ஜனாதிபதிக்கு...

ஈஸ்டர் தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பான குழு அறிக்கைகள் தொடர்பான உண்மைகளை முன்வைப்பதற்காகக் கொழும்பில் திங்கட்கிழமை (28) காலை நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தேசத்திடம் மன்னிப்பு கோருவதற்கும், ரவி செனவிரத்னவை பதவியில் இருந்து நீக்குவதற்கும் ஜனாதிபதிக்கு இன்னும் சந்தர்ப்பம் இருப்பதாகவும், அவ்வாறு செய்யாவிட்டால் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, ரிஷாத் பதுர்தீன் மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை உருவாக்கி அந்தத் திறமையைத் தான் வெளிப்படுத்தியுள்ளதாக உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு மிகப்பெரும் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவித்த கம்மன்பில, அனுர ஜனாதிபதி என்பதாலேயே அவர் கோமாவில் இருந்து விழித்துக்கொண்டார் என்றார்.

## “சமூகத்துக்காக போராடவில்லை”

“முஸ்லிம்கள் கடந்த காலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த போது தங்களது சுய இலாபங்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்கள். சமூகத்துக்காகப் போராடவில்லை என்பதை மக்கள் நன்கு புரிவார்கள் தங்களுக்குத் தேவையான அரசியல் தலைமைகள் சரியாகச் சிந்தித்து மக்கள் முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்” என்றார்.

நாட்டு மக்கள் பாராளுமன்ற தேர்தலுக்கு முகங்கொடுத்து உள்ள நிலையில் பல கட்சிகள் பல வேட்பாளர்களால் குழப்பமடைந்த உள்ளார்கள். வரலாற்றில் பல கட்சிகளைக் கொண்ட வேட்பாளர்கள் புதிய சிந்தனை புதிய கட்சிகள் ஊடாக களமிறக்கப்பட்டு உள்ளனர் இதனால் பிரதிநிதித்துவங்களை இல்லாமல் செய்யும் நிலை உள்ளாகலாம். சிஸ்டம் சேஞ்ச் என்கிறவாறு அது சரியாக நடை முறைப்படுத்த வேண்டும்.ராஜபக்ஷர்கள் குடும்பம் அரசியலில் இருந்து யாருமே இல்லாதவாறு ஒதுங்கி உள்ளார்கள்.

இது போன்று பாராளுமன்றத்தில் அரசியல் ஜாம்பவான் என்று நினைத்துச் செயற்பட்டவர்கள் மக்கள் மத்தியில் வர முடிந்தளவுக்குத் தேர்தலில் இருந்து ஒதுங்கி உள்ளார்கள். எனவே, தான் நல்ல தலைவர்களுக்கு மக்கள் ஆணையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# டெங்கு பரவும் இடம் சுற்றிவளைப்பு

■ றீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சிமுனை பிரதேசத்தில் பாரியளவில் டெங்கு குடம்பிகள் பரவியுள்ள இடமொன்றை பொலிஸாரின் பூரண ஒத்துழைப்புடன் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஞாயிற்றுக்கிழமை (27) சுற்றி வளைத்துள்ளனர்.

குறித்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பாரிய அளவிலான நீர்த்தாங்கி ஒன்றினுள் பெருமளவு டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாகத் தூய்மைப்படுத்தாது காணப்பட்ட இந்த நீர்த்தாங்கியில் பெருமளவு டெங்கு குடம்பிகள் காணப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் ஸ்தலத்திற்கு விரைந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறித்த டெங்கு குடம்பிகள் பரவும் வகையில் வைத்திருந்த இடத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

குறித்த இடத்தில் சிவப்பு எச்சரிக்கை ஸ்டிக்கர் ஒட்டப்பட்டதுடன் மூன்று தினங்களுக்குள் குறித்த இடத்தை முழுமையாகத் தூய்மைப்படுத்தி சுகாதார பரிசோதகர்களுக்குக் காண்பிக்க வேண்டும் அதையும் மீறி இவ்வாறு டெங்கு குடம்பிகள் பரவும் வகையில் இடத்தை வைத்திருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார பரிசோதனைகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



# ஆசி பெறும் நிகழ்வு



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

இலங்கை இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளைத் தலைமையக படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 21 வருட நிறைவையொட்டி, சமய ஆசியைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வொன்று காத்தாஙன்குடி அல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாசலில் திங்கட்கிழமை (28) நடைபெற்றுள்ளது.

இதன்போது, விசேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றுள்ளது. பிராத்தனைகளையை காத்தாஙன்குடி அல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாசலின் இமாம் அஷ்ஷெய்க் இல்ஹாம் பலாஹி நடத்தியுள்ளார்.

இதில், கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்க பிரிகேடியர் பெர்ணான்டோ அல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாயலின் தலைவர் கே.எல்.எம்.பரீட் உட்பட இராணுவ உயரதிகாரிகள் அல் அக்சா ஜும்ஆப் பள்ளிவாசலின் இமாம்கள் பள்ளி வாயல் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

## ஒய்வுபெற்ற ஆசிரியர்
# கழுத்து நெரித்து படுகொலை

கேகாலை, ஹெட்டிமுல்ல, புருருப்ப பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் தனது வீட்டில் வைத்து கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.


கிரி சாந்த புலஸ்தி மாரப்பன என்ற 74 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தனது மனைவியுடன் வீட்டில் இருந்துள்ளார். அப்போது வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அந்த நபரைக் கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளனர். அதன்பின்னர், வீட்டில் இருந்த காரில் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தக் கார், பிந்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டபொல பிரதேசத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சம்பவம் தொடர்பில், எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நினைவு மலர் வெளியீடு



செட்டியார் தெரு, பம்பலபிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் 50 வருட காலமாக ஆன்மீக குருவாக இருந்து மறைந்த சண்முகரத்தின குருக்கள், விஸ்வநாத குருக்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை வஜ்ரா பிள்ளையார் ஆலய வளாக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அவர் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட நினைவு மலரை, கனடா கமலநாதன், குருக்கள்களான நாகராஜ, ராமச்சந்திர,பாபு சர்மா மற்றும் சச்சிதானந்த ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.



# ஓய்வுபெற்ற ஆசிரியர் கழுத்து நெரித்து கொலை

கேகாலை, ஹெட்டிமுல்ல, புருருப்ப பிரதேசத்தில் நபர் ஒருவர் தனது வீட்டில் கழுத்து நெரித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒய்வுபெற்ற ஆசிரியரான கிரி சாந்த புலஸ்தி மாரப்பன (வயது 74) என்பவரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (27) மாலை கொல்லப்பட்டுள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்

குறித்த நபர் தனது மனைவியுடன் வீட்டில் இருந்துள்ளார். அப்போது வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அந்த நபரை கழுத்தை நெரித்து கொன்றுள்ளனர். அதன்பின்னர், வீட்டில் இருந்த காரில் தப்பிச் சென்றார்

அந்த கார், பிந்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டபொல பிரதேசத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது

சம்பவம் தொடர்பில், எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்சி ஆதரவாளர் கடை மீது தாக்குதல்

■ வி.ரி.சகாதேவராஜா

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் ஆதரவாளரது கடையின் மீது இனந்தெரியாதோரினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பில் இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (27) இரவு இடம் பெற்றுள்ளது.

தாளவட்டுவான் பிரதான வீதியில் அமைந்துள்ள தற்காலிக கடை ஒன்றே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.



அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் வைத்தியர் பிரகாஸின் ஆதரவாளரது கடையே அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு குறித்த வேட்பாளர் சென்று சேதமடைந்த கடையைப் பார்வையிட்டதுடன், தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு அளிக்க ஆதரவாளருடன் சென்றுள்ளார்.

இதன்போது, பொலிஸ் நிலையத்தில் குறித்த முறைப்பாடு ஏற்றுக்கொள்ளாமையின் காரணமாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் திங்கட்கிழமை (28) முறைப்பாடு செய்ய எண்ணியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

# ஹசீனாவை நாடு கடத்த கோரி ஆர்ப்பாட்டம்

■ நூருல் ஹுதா உமர்

இலங்கை - பங்களாதேஷ் நட்புறவு பேரவையின் ஏற்பாட்டில் கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலய முன்றலில் ஆர்ப்பாட்டம் திங்கட்கிழமை (28) முன்னெடுக்கப்பட்டது.




கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பங்களாதேஷில் அந்நாட்டு மாணவ இயக்கங்கள், எதிர்கட்சியினர், இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் மக்கள் திரண்டு கிளர்ச்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஷேக் ஹசீனாவின் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அதன்போது நிறைய கிளர்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசாங்கத்தினால் கொல்லப்பட்டனர். இதனால் உக்கிரமடைந்த கிளர்ச்சியால் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான 45 பேர் இந்தியாவுக்கு தப்பி சென்றனர். முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக அந்நாட்டு உயர் நீதிமன்றத்தில் நிறைய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் அவர்களை கைது செய்ய அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இருந்தபோதிலும் தப்பிச்சென்ற அவர்களை இந்தியா அடைக்கலம் கொடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. அதை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகவும், ஷேக் ஹசீனா வையும், இந்தியாவில் அடைக்கலம் புகுந்துள்ளோர்களையும் உடனடியாக பங்களாதேசுக்கு திருப்பியனுப்ப கோரியே இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் போராட்டகாரர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.


இது விடயம் தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மகஜரொன்றையும் கையளித்தனர்.





# சூரிய ஒளி கூரைகள் வழங்கி வைப்பு


மேல் மாகாணத்திலுள்ள ஹோகந்தர விகாரை, ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம், புனித அந்தோனியார் தேவஸ்தானம் மற்றும் முத்வல் ஜூம்மா மசூதி ஆகிய நான்கு மத இடங்களுக்கு சூரிய ஒளி கூரைகள் ( சோலார் பேனல்) இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் சனிக்கிழமை (25) வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கை மின்சார சபை (CEB), மற்றும் இலங்கை நிலையான எரிசக்தி அதிகார சபை (SLSEA) ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.









# ஒரே இரவில் 8 வீடுகளில் கொள்ளை

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மண்டூர் பிரதேசத்தில் ஒரே இரவில் 8 வீடுகளை உடைத்து இரு வீடுகளில் இருந்து 60 பவுன் தங்க ஆபரணங்கள் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (27) இரவு இடம் பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள மண்டூர் முதலாம் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 8 வீடுகளுக்குள் புகுந்து இரண்டு வீடுகளில் இருந்த 60 பவுன் தங்க ஆபரணங்கள் திருடிச் செல்லப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (27) இரவு இடம் பெற்றுள்ளது.

வீட்டார் வழமைபோல வீடுகளை பூட்டிவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலையில் வீடுகளின் ஜன்னல் கதவு, மற்றும் சமையலறை ஜன்னல் கதவுகளை உடைத்து வீடுகளுக்குள் நுழைந்த திருடர்கள் இரு வீடுகளில் இருந்து 60 பவுன் தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் தடயவியல் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அறிவித்தல்
ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட்
(பதிவு இல: PB 313)

(பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இல.25, ஷெர்பரி பார்க், கொழும்பு 04)

ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட் நிறுவனத்தின்
முன்மொழியப்பட்ட மூலதனக் குறைப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 இன் படி, வரையறுக்கப்பட்ட ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட் (நிறுவனம்) நிறுவனத்தின் சாதாரண பங்குகளை உள்ளடக்கிய ரூ. 3,620,496,000/- குறிப்பிடப்பட்ட மூலதனம் நிறுவனத்தின் பங்குதாரரான ரெக்கிட் பென்கிசர் ஹெல்த் (ஹோல்டிங்ஸ்) லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 2,374,300,783/- மொத்தத் தொகையாக செலுத்துவதன் மூலம் சாதாரண பங்கு 317,992 கொண்டிருக்கும் ரூபா 1,246,195,217/- வரை குறைப்பது குறித்து இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து அறுபது (60) நாட்களுக்கு சிறப்புத் தீர்மானத்தின் மூலம் நிறுவனத்தின் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

பணிப்பாளர் சபையின் உத்தரவின்படி
ரெக்கிட் பென்கிசர் (லங்கா) லிமிடெட்
ஜேசி மற்றும் கம்பனி
கம்பனியின் செயலாளர்கள்

# ஹோட்டல் விவகாரமும் வெளிச்சத்துக்கு வராத சம்பவங்களும்

ஒவ்வொரு பெரும் நகரங்களிலும் அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் பிரசன்னமே அதிகமாக இருக்கும். அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே புறந்தள்ளி, ஒதுக்கி வைத்து, மனதை நோகடிக்கச் செய்து, வர்த்தகத்தில் ஈடுபடலாம் என்று நினைப்பது முட்டாள் தனமாகும். அதேபோல, அவர்களின், கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தாத வகையில் நடந்து கொள்வதும் வார்த்தைகளைப் பிரயோகிப்பது அவசியமாகும்.

ஹட்டனில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்குள் திடீரென புகுந்த அம்பகமுவ சுகாதார பணிமனையைச் சேர்ந்தவர்கள், அங்கு நடத்திய சோதனையின் போது, மக்களின் நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுகள் தயாரிக்கப்படுவது, சுகாதார விதிமுறையைப் பேணாமை அம்பலமாகியது. இது, அந்த ஹோட்டலில் மட்டுமன்றி, மலையகத்தில் உள்ள பெரும் நகரங்களில் இருக்கும் பல ஹோட்டல்களில் காணப்படுகின்றது.

குற்றமிழைத்தவர்கள், தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும். எனினும், தன்னுடைய பின்புலத்தைக் காண்பித்து, மக்களின் உயிர்களுடன் விளையாடக்கூடாது. எனினும், அந்த ஹோட்டலின் உரிமையாளர் நடந்துகொண்ட விதம், சமூக ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. நுகர்வோர் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ப, சுகாதாரமான, தரமான உணவுகளை வழங்க வேண்டியது ஹோட்டல் உரிமையாளர்களின் பொறுப்பாகும்.

ஒக்டோபர் 31ஆம் திகதியன்று தீபாவளி கொண்டாடப்படுகிறது. மலையகத்தைப் பொறுத்தவரையில், தீபாவளி வியாபாரமே களைக்கட்டும். என்னதான், கஷ்டமாக இருந்தாலும், குடும்பத்துடன் சென்று, புத்தாடைகளை வாங்குவதில், அம்மக்களிடம் இருக்கும் சந்தோஷத்துக்குக் குறைவே இருக்காது. இவ்வாறான நிலையில், ஹோட்டல்களுக்குச் சென்று, சிற்றுண்டிகளையோ அல்லது பகலுணவை அருந்தக்கூடாது. எனினும், கொள்ளை இலாபத்தை மட்டுமே எதிர்பார்க்கும் சில ஹோட்டல்களின் உரிமையாளர்கள், தரமற்ற சுகாதாரக் கேடான, உணவுகளைத் தயாரித்து, விற்றுத் தீர்த்து விடுகின்றனர். ஆனாலும், பொதுச் சுகாதார பிரிவினரின் சுற்றிவளைப்புக்குள் சிக்கியும் கொள்கின்றனர்.

பொதுவான பண்டிகை காலங்களில், திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வது கட்டாயமாகும். இதனூடாகவே பல விடங்களை அம்பலத்துக்குக் கொண்டுவர முடியும். ஹட்டனில், அந்த ஹோட்டலின் உரிமையாளர், “எஸ்டேட் ஆட்கள்தான் இங்க வாறாங்க. அவங்க தகுதிக்கு ஏத்த சாப்பாடு தான் கொடுக்க முடியும். ஐந்து ஸ்டார் ஹோட்டல் சாப்பாடு கொடுக்க முடியாது” என கூறியுள்ளமையும் பொதுவெளியில் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

தோட்டத் தொழிலாளர்களைக் கேவலப்படுத்தும் இவ்வாறான வார்த்தைகளை முதலாளிமார் பயன்படுத்துவதற்கு, அம்மக்களின் பிரதிநிதிகளும் பொறுப்பு கூறவேண்டும். அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உரமூட்டி இருந்திருந்தால், இவ்வாறு கேவலமான வார்த்தைகளைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.

அதுமட்டுமன்றி, பெருநகரங்களில் இருக்கும் ஹோட்டல்களில், ஆகக்கூடுதலான எண்ணிக்கையிலான தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளே தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

பல்வேறு தொழில்துறைகளில் மிளிர்ந்து கொண்டிருக்கும் பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக ஏனையவர்களும் திகழ வேண்டுமாயின், ஹோட்டலில் கூலிகளாக பணியாற்றுவதை விட, ஹோட்டல் உரிமையாளர்களாகும் குறிக்கோளுடன் பயணிக்க வேண்டும். அப்போதான், பாடம் கற்பிக்க முடியும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

குணங்கள் மாறுவது இயல்பானது. ஆனால், அவை முன்னேற்றகரமானவையாக அமைதல் வேண்டும். தற்போதைய நெருக்கடியான வாழ்க்கைச் சூழலிலும் பரந்த நெஞ்சத்துடன் வாழவேண்டும்.

சில வர்த்தகர்கள் ஆரம்பத்தில் கஷ்டப்பட்டு, பலசரக்குக் கடையை வைத்திருப்பார்கள். கடையின் அயலில் உள்ள மக்கள், தெரிந்தவர், பரிதாபம் கருதி அந்தக் கடையில் பொருட்களை வாங்குவார்கள். காலப்போக்கில், அந்தப் பலசரக்குக் கடை பெரியளவில் வளர்ந்துவிடும்.

அத்துடன், முதலாளிக்கும் கர்வம் வந்துவிடும். பழைய வாடிக்கையாளர்களைப் புறந்தள்ளி, வசதியுள்ள புதிய வாடிக்கையாளர்களுடன் நட்புக் கொண்டுவிடுவார்கள்.


ஆனால், மிகவும் தர்ம சிந்தையுள்ள அநேக வர்த்தகர்கள், மக்களுடன் இணைந்து தங்கள் கடமைகளைத் தக்க தருணத்தில் செய்துவிடுவார்கள்.

நேர்மையான வர்த்தகம் தோற்றுப்போவது கிடையாது. பலநிறுவனங்கள் சமூகசேவைகளில் மும்முரமாக இயங்குகின்றன. நல்லது செய்தால், வரவு அதிகமாகும். எந்தச் சோதனையிலும் தன்னிலை மாறலாகாது.

நன்றி-பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### பஸ் இன்மையால் அவதி



நாவலப்பிட்டி கடியன்லேன தலவாக்கலை வீதியில் சேவையில் ஈடுபட்டுவந்த நாவலப்பிட்டி நகரில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் கடந்த வாரங்களில் இருந்து சேவையில் இல்லாமையால் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகிறார்கள்.

இந்த பஸ் சேவையை நம்பியே நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் இவ்வழியே பயணத்தை மேற்கொள்கிறார்கள். பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நாவலப்பிட்டி பஸ் டிப்போவினால் நிர்வகிக்கப்படும் இப் பஸ் சேவை குறித்து டிப்போ தரப்பினருக்கு எடுத்துரைத்த போதிலும், பொருத்தமான நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பயணிகள் கடும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த சாரதி சேவையிலிருந்த போது, இறந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னரே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பயணிகள், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரியத் தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளனர்.

பல கேள்விகளை எழுப்பியுள்ள

# அறுகம்பே பிரதேச விவகாரம்

**மொஹமட் பாதுஷா**

நாடு ஓரளவுக்கு அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற காலகட்டத்தில், அறுகம்பே பிரதேசத்தில் தாக்குதல் நடத்தப்படலாம் என வெளியான எச்சரிக்கைத் தகவல் அரசையும், மக்களையும் ஒருவித பதற்றத்திற்குள் தள்ளி இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் - அறுகம்குடா பகுதியில் தங்கியுள்ள இஸ்ரேலியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று கிடைக்கப் பெற்ற புலனாய்வு தகவலை அடிப்படையாகக் கொண்டு முதலில் அமெரிக்கத் தூதரகமே பொதுவெளியில் ஒரு முன்னெச்சரிக்கையை விடுத்து, தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவித்தது.

இதனையடுத்து, அரசாங்கம் பாதுகாப்பைப் பலப்படுத்தி, நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையில், ஏனைய பல நாடுகளும் அறுகம்பே மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளுக்கான பயண எச்சரிக்கையை விடுத்துள்ளன.

உண்மையில், இந்தத் தகவல் ஏற்கெனவே அரச புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்திருந்ததாகவும், இருப்பினும் தேர்தல் காலம் என்பதாலும் இது வெளிநாட்டவர்களுடன் தொடர்புபட்ட விவகாரம் என்பதாலும் இதனைப் பகிரங்கப்படுத்தாமல் இரகசியமான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்ததாகவும் இப்போது தெரியவந்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றி தமக்கு முன்னமே தெரியுமென கூறியிருந்த இந்தியப் புலனாய்வுப் பிரிவுக்கு அறுகம்பே தாக்குதல் எச்சரிக்கை பற்றியும் ஏற்கெனவே தெரியும் என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இருப்பினும். அமெரிக்கத் தூதரகம் இதனைப் போட்டு உடைத்துள்ளது. அதுமட்டுமன்றி, இலங்கை பற்றிய அவதானம் ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாத் துறையும் அது சார்ந்த பொருளாதார பிரிவுகளும் பாதிக்கப்படலாம் என்ற நியாயமான ஒரு கவலை எழுந்துள்ளது.

எது எப்படியோ, உண்மையில் அப்படியான ஒரு சதித்திட்டம் யாருக்காவது இருந்திருக்கின்றது என்றால், அந்த அசம்பாவிதம் நடப்பதற்கு முன்னால் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர அரசாங்கம் எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். வேறு நாடுகளோ, பயங்கரவாத, அடிப்படைவாத அமைப்புக்களோ தமது எதிரிகளை இலக்கு வைப்பதற்கான ஒரு களமாக இலங்கையைப் பாவிப்பதற்கு யாரும் இடமளிக்கமுடியாது. அவர்களது சண்டைக்குள் இலங்கையர் மாட்டிக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. இது மிகப் பாரதூரமான ஒரு விவகாரமாகும். இதனை இப்படியே கண்டும் காணாமல் விட்டு விடமுடியாது. இந்த விடயத்தை ஒரு வெறும் தாக்குதல் எச்சரிக்கையாக மட்டுமன்றி, வேறு பல கோணங்களிலும் நோக்க வேண்டியிருக்கின்றது.

பொத்துவில்-அறுகம்பே என்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசம் தமிழ் மக்களும், சிறிதளவான சிங்களவர்களும் உள்ளனர். இங்கு கடந்த சில காலமாக முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான காணியைக் கொள்வனவு செய்து, அங்கு யூத சன சமூக நிலையம் என்ற பெயரில் ஒரு மையம் இயங்கி வருகின்றது.

ஒரு பள்ளிவாசலுக்கு மிக அருகில் அமைந்துள்ள இவ்விடத்திற்குச் சுற்றுலாப் பயணிகளான இஸ்ரேலியர்கள் உள்ளிட்ட யூதர்கள் அடிக்கடி வந்து செல்வதாகவும் அவர்களின் ஒரு முக்கிய தலமாக அது மாறி வருகின்றதா என்ற சந்தேகம் தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் பொத்துவில் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் பல பாகத்திற்கும் சுற்றுலாப் பயணிகள் செல்கின்றார்கள். யூதர்கள் தங்கியுள்ளார்கள். ஆனால் அறுகம்பே இலக்கு வைக்கப்பட்டதாகக் கூறப்படுவதற்கு. மேற்குறிப்பிட்ட தலமும், அறுகம்பேயில் இஸ்ரேலியர்களின் அதிகரித்த பிரசன்னமும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

பொத்துவிலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கமானது. அது அப்பிரதேசத்திற்கு மட்டுமன்றி, நாட்டின் பொருளாதாரத்திற்கே பல அனுகூலங்களைத் தருகின்றது என்பதை மறுக்க முடியாது.

ஆனால், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியில் இப்படியான ஒரு யூத மையத்தை அமைத்து, சர்ச்சையை ஏற்படுத்தி ஏன் இஸ்ரேலியர்கள் காலூன்ற நினைக்கின்றனர். தொழிலுக்காக அல்லது சுற்றுலாவுக்காக வந்த இடத்தில் ஆக்கிரமிப்பு பாணியில் செயற்படுவது உரிமை, ஜனநாயகம் என்று சொல்ல முடியுமா?

நமது நாட்டிற்குள் வரும் எந்த நாட்டவரையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவரது உரிமையை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் நமக்குள்ளது. ஆனால், அதற்கு சில வரன்முறைகள் உள்ளன என்பதையும் மறந்து விடக் கூடாது.

இங்கு இஸ்ரேலியர்கள் குழுமியிருப்பதால்தான் தாக்குதல் அபாயமுள்ளது என்றால், இது இலங்கை மக்களுக்கு உண்மையில் ஒரு தேவையற்ற தலையிடி ஆகும். உலகில் பல சர்ச்சைகளைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் பிரிவினர் நமது நாட்டுக்குள் அளவுக்கதிகமாக காலூன்ற முனைவதும் அது நமக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதும் நல்லதல்ல.

உலகில் பலஸ்தீனம் உள்ளடங்கலாக யூதர்கள் ஆக்கிரமித்த நிலப் பரப்புக்களில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் அறிவோம். ஆகவே, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பிரதேசத்தில், யூதர்களின் பிரசன்னம் உள்ளது என்பதற்காக அது ஒரு தாக்குதல் இலக்காக ஆக்கப்படுவதற்கான களநிலைமைகளுக்கு இடமளிக்கக் கூடாது.

அடுத்த விடயம், இலங்கையை ஆட்டிப் படைக்க நினைக்கின்ற வெளிநாடுகள் நாட்டில் குழப்பத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தி இலங்கையை வழக்கம்போல அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மை அற்ற நாடாக ஆக்கும் திட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முனைகின்றனவா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் இந்தியா, சீனா, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தமது நலன்களை உறுதிப்படுத்த முழுக் கவனத்தையும் செலுத்திச் செயற்படுகின்றன. அதற்காக உள்நாட்டில் உள்ள சில பேர்வழிகளும் விலைபோகின்றார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும்.

அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம், சீனா சார்பு போக்குள்ளதாகக் கருதப்படுகின்றது. அனுரவை தம்பக்கம் இழுத்துக்கொள்ள இந்தியா பகீரதப் பிரயத்தனங்களை எடுத்து வருகின்றமை கண்கூடு.

இருப்பினும், இந்தியாவின் ஒரு பிரபல நிறுவனத்தின் செயற்றிட்டத்தை மீள் பரிசீலனை செய்ய புதிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், ஏற்கெனவே இலங்கையில் வர்த்தக நலன்களை எதிர்பார்த்துள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் ஆதரவுடன் புதிய அரசியல் கட்சியொன்று இத்தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் வகிபாகம் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில், இப் பிராந்தியத்தில் ஏனைய பல நாடுகளிலான இந்தியாவின் ஆதிக்க அரசியல் சரிவைச் சந்தித்துள்ளது.

எனவே, மீதமுள்ள இலங்கையையும் கைநழுவ விட்டுவிடப் புதுடில்லி விரும்பாது என்பது சிறுபிள்ளைக்கும் தெரிந்த அரசியலாகும்.

இதேவேளை, அனுரகுமார அரசாங்கம் இடதுசாரிக் கொள்கையின் பக்கம் முழுமையாகப் போவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகும். இருப்பினும், அப்படியொரு பயம் மேற்குலகுக்கு இருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். இப்படியான பின்னணியில், தமக்குக் கிடைத்த புலனாய்வு தகவலை அரச தரப்புடன் பகிர்ந்து கொள்ளாமல் அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டதாகக் கூறப்படுகின்றது. இது உண்மை என்றால், இது பல சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்ற விடயமாகின்றது.

இலங்கையில் புதிதாக ஒரு அரசாங்கம் பதவியேற்றுள்ளது. மக்களுக்கு சிறியதொரு நம்பிக்கையும் நாட்டில் ஒருவித ஸ்திரத்தன்மையும் ஏற்பட்டுள்ளதான தோற்றப்பாடு காணப்படுகின்றது.

இந்நிலையில், இதனைக் குழப்புவதற்கு ஏதேனும் குழுக்கள் அல்லது வெளிநாடுகள் விளைகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்று தூதரகங்களே அறிவிப்பது சாதாரணமான விடயமல்ல.

இது நாட்டின் பாதுகாப்பு பலவீனம் பற்றிய கேள்விகளை எழுப்புவது மட்டுமன்றி, நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைச் சீண்டிப்பார்க்கின்ற விடயமும் ஆகும்.

மிக முக்கியமாக, இலங்கையில் சுற்றுலாத்துறை மிக வளர்ச்சி கண்டு வருகின்றது. எனவே, நாட்டின் சுற்றுலாப் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக இருக்குமா என்ற கோணத்திலும் விசாரணைகளை நடத்த வேண்டி இருக்கின்றது.

இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்களை தாக்குவதற்குத் திட்டமிட்டவர்கள் யார்? இஸ்ரேலுக்கு வெளியே உள்ள ஒரு நாட்டில் ஏன் அவர்கள் குறிவைக்கப்பட வேண்டும்? முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அறுகம்பே பிரதேசம் அதற்காகத் தெரிவு செய்யப்பட வேண்டும்? இதற்குப் பின்னால் பயங்கரவாதம் உள்ளதா? அல்லது வெளிச் சக்திகள் உள்ளனவா? என்ற பல வினாக்களுக்கு, விசாரணைகள் ஊடாக விடை காண வேண்டும்.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலின் வலிகளிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை. அது தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவும் இல்லை.

நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கையில் இன, மத முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கான ஒரு திடலாக அல்லது வெளிச் சக்திகள் தங்களுக்கு இடையில் மோதிக் கொள்வதற்கான களமாக பயன்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமாயின், அதனை அரசாங்கமும் மக்களும் தடுத்து நிறுத்தியே தீரவேண்டும்.



# பெரும்பான்மைத்துவத்தின் சூறையாட்டம்



பெரியசாமி சுசாந்தனி,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



இலங்கையினுடைய ஒன்பது மாகாணங்களில் முக்கியமான ஒரு மாகாணமாகவும் மலையகத்தின் எல்லையாகவும் விளங்குவது சப்ரகமுவ மாகாணமாகும். இம் மாகாணமானது இரத்தினபுரி-கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ளடக்கிய பெரும்பான்மை இன மக்கள் சூழ்ந்த மாவட்டமாக விளங்குகின்றது.

இரத்தினபுரி மாவட்டமானது பல இயற்கை வளங்களுடன் சூழப்பட்டும் இரத்தினக்கல் வியாபாரத்திற்கு பிரபல்யமான இடமாகவும் இறப்பர் பெருந்தோட்டப் பயிர்களுக்கு பிரபல்யமான இடமாகவும் அறியப்படுகின்றது. பல இயற்கை வளங்களால் சூழ்ந்து காணப்படும் ஓர் எழில் மிகுந்த இடமாக இருந்தாலும் மற்றுமொரு பக்கத்தை நோக்கும் போது நூற்றுக்கு 80 வீதமான பெரும்பான்மைத்துவமே இங்கு சூழுறைந்து காணப்படுகின்றது.

மலையகம் என்றாலே தமிழ் மக்கள்-தமிழர் சமூகம் என பேசப்படும் வேலையில் இரத்தினபுரி- கேகாலை போன்ற எல்லைப்புற கிராமங்கள் பெரும்பாலும் சகோதர மொழியாகவே காணப்படுகின்றது. இங்கு பொது நிர்வாகங்கள், கடைகள், வங்கி என எங்கு சென்றாலும் சிங்கள மொழி என்பது இன்றியமையாத ஒரு அம்சமாகவே விளங்குகின்றது.

இரத்தினபுரி பிரதேசத்தை பொறுத்தவரையில் 50க்கும் மேற்பட்ட தோட்டப்புறங்கள் காணப்படுகின்ற வேளையில் அப்பகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தோட்டப்புறங்களாக காணப்பட்டாலும் கூட அத்தோட்டங்களைச் சூழவும் சிங்கள மக்கள் அதிக அளவில் செறிந்து வாழும் போக்கு காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சூழலில் வாழ்கின்ற தன்மையினால் இப்பிரதேச தமிழ் மக்கள் சிங்கள மொழியைச் சரளமாகவும் இலகுவாகவும் கற்கின்ற நிலை இயல்பான ஒன்றாகவே விளங்குகின்றது. இது கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அப்பிரதேச மக்களுக்கும் அவர்களுடைய எதிர்காலத்திற்கும் சாதகமான தன்மையாகவே காணப்படுகின்றது.

ஒரு கலாசாரத்துடன் இணைந்து செயல்படுவது நன்மையான ஒன்றாகவே இருந்தாலும் கூட, எங்கள் அடையாளம், எங்களின் பிரதிநிதித்துவம், எங்களின் ஆதிக்கம் என்பதை எம் பெருந்தோட்ட சமூகத்திற்குப் புகட்டிச்செல்லவே செய்கின்றனர்.

எந்த ஒரு அரசாங்கம் சார்ந்த நிறுவனமாக இருக்கலாம் அரசாங்கம் சாராத நிறுவனங்களாக இருக்கலாம் தம்முடைய பிரச்சினைகளை வெளிப்படுத்தும் காவல்நிலையம் மற்றும் வைத்தியசாலை போன்ற பொது இடங்களாக இருக்கலாம் பெரும்பான்மை இன மக்கள் இருக்கின்ற வேளையில், மக்கள் தங்களுடைய பிரச்சனைகளை தெளிவாக சொல்லவேண்டிய சூழ்நிலைகளில் சிக்கல்களையும் இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர்.

இப்பிரதேசங்களை பொறுத்தவரையில், சிறுபான்மை மக்களாக தமிழ் மக்கள் இருக்கின்ற வேளையில் அவர்களுடைய நிலங்கள் சூறையாடப்படுதல் அது தோட்டப்புறங்களாக இருந்தாலும் சரி, பாடசாலை நிலங்களாக இருந்தாலும் சரி, அங்கு வாழக்கூடிய பெரும்பான்மையினரால் அந்நிலங்கள் நாளொரு வீதம் அங்குலமங்குலமாக சூறையாடப்படுதல் அதிகாரத்தின் பெயரில் தாக்குதல்களை நடத்துதல் என அவர்களுடைய பிரதிபலிப்பு காணப்படத்தான் செய்கின்றது.

அதேவேளை, இவ்வாறான விடயங்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் போது நாம் இயல்பானதொரு சுமுகமான வாழ்க்கையை இச்சூழலில் வாழமுடியாது நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இது மட்டுமன்றி, கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகம் மாவட்ட செயலகம் என கிராமப்புற மக்களின் அடிப்படை பிரச்சினைகளைக் கேட்டறியக்கூடிய நிலையில், இருக்கும் உத்தியோகத்தர்கள் கூட எம் சமூகம் சார்ந்து இல்லாதிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகவே பார்க்கப்படுகின்றது. இங்கு அடிப்படைத் தேவைகளைக் கேட்டறியும் நிலையில், இருக்கும் உத்தியோகத்தர்கள் சகோதர மொழி சார்ந்தவர்களாக இருக்கின்ற வேலையை எமக்கான வாய்ப்புகள் சலுகைகள் பல்கலைக்கழக சாதாரண தர உயர்தர மாணவர்களுக்கான புலமை பரிசுகள், சமுர்த்தி திட்டங்கள் மற்றும் ஏனைய நலன்புரி திட்டங்கள் என அனைத்தும் மக்களுக்குத் தெரியாதவையாகவே மறைக்கப்படுகின்ற சூழலே இங்குக் காணப்படுகின்றது.

இதேவேளை, ஏதோ ஒரு சூழலில் நாம் பல்கலைக்கழக மாணவராக இருக்கின்ற வேளையில், சமுர்த்தி திட்டங்கள் வாயிலாகவோ ஏனைய நலன்புரி திட்டங்கள் வாயிலாகவோ உயர்கல்வியைத் தொடரும் பிள்ளைகளுக்குப் புலமை பரிசு கிடைக்கும் என அறிந்து நாமாகவே சென்று கேட்கின்ற போதும், அவ்வாறான புலமை பரிசில்கள் இருந்தன. இப்போது இல்லை. நீங்கள் இந்த கடிதங்களைக் கொண்டுவாருங்கள் இவற்றை உறுதிப்படுத்தி வாருங்கள் என எம்மை புறக்கணிக்கும் போக்கே அங்குக் காணப்படுகின்றது.


அதுமட்டுமின்றி, தோட்டப்புறங்களில் வேலை செய்யும் குடும்பங்களுக்குக் கிடைக்கும் சலுகைகள், உதவிகள் தெரிந்தே எமது மக்களுக்குப் புறக்கணிக்கும் போக்கும் இங்குக் காணப்படுகின்றது. இது மட்டுமின்றி, இவ்வாறான அரசாங்கத்தினால் இலவசமாகக் கிடைக்கும் நலன்புரி திட்டங்களுக்கு இவர்கள் பணம் அறவிடும் நிலையினையும் காணக்கூடியதாகவே தான் இருக்கின்றது. இவ்வாறான தவறுகள் இடம்பெறும்போது, கல்வி கற்ற பிள்ளைகள் இருக்கும் குடும்பங்களில் எதற்காக இவ்வாறு பணம் அளவிடுகின்றீர்கள் என அதற்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டாலும், சிலர் எதனையும் அறியாது பணத்தினை வழங்கி சலுகை என்ற பெயரில் பெற்றுக்கொள்கின்றனர். இது எமது மக்களுக்கு அறியாமையாகவே காணப்படுகின்றது. ஆனாலும், இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டதும் அந்த உதவிகள் நிராகரிக்கப்படுமே தவிர, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாத ஒரு சூழலும் இங்குக் காணப்படுகின்றது. இவை அனைத்திற்கும் காரணமாக விளங்கக் கூடியது இப்பிரதேசத்தினுடைய பெரும்பான்மைத்துவ போக்கே ஆகும்

இந்த பிரதிநிதித்துவத்தை எல்லா இடங்களிலும் காணக்கூடியதாகவே உள்ளது. வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவில் பாதணிகளை அகற்றிவிட்டுச் செல்லவும் என அறிவுறுத்தல் இருக்கின்ற நிலையில் நம் சமூகத்தைச் சார்ந்த தோட்டப்புற மக்கள் அகற்றிவிட்டுச் செல்ல வேண்டும். அதே நேரம், அவர்கள் அகற்றாமல் சென்றால் அங்கு எதுவும் கூறப்படுவதில்லை. இதே நேரம் நாம் அகற்றாமல் சென்றால் அங்கு அனைவரின் முன்னிலையிலும் எம்மை பேசும் போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தைக் காட்டி நிற்கின்றது.

ஒரே சூழலில் வாழும் போது எம்மோடு சகோதரராய் சுமுகமாகப் பழகும் போக்கு காணப்பட்டாலும் கூட பல தருணங்களில் அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை வெளிக்காட்டியே செல்கின்றனர்.

எம்முடைய சமூகத்திலிருந்து கல்வி கற்று எம் மாணவர்கள் அரச நிறுவனங்களை அலங்கரிக்கும் போது மட்டுமே இவ்வாறான ஒரு பிரதிநிதித்துவத்தைக் கடந்து எமக்கான தேவைகளையும் உரிமைகளையும் சலுகைகளையும் நாமாகவே பெற்றுக்கொள்ளக்கூடிய இணக்கமான சூழல் உருவாகும். அந்த சூழலை உருவாக்குவதற்காக தோட்டப்புற மாணவர்கள் ஆகிய நாம் சிறந்த கல்வியைப் பெற்று எம் மக்களின் அறியாமையை அகற்ற வழி அமைப்போம்.

# மம்முட்டியின் தெரிவு



மலையாள படமான 'பட்டம் போலே' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமான மாளவிகா மோகனன், தொடர்ந்து, தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழி படங்களில் நடித்து வருகிறார்.

தமிழில் 'பேட்ட', 'மாஸ்டர்' 'மாறன்' மற்றும் விக்ரம் நடிப்பில் வெளியான தங்கலான் ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். தொடர்ந்து, கார்த்தி நடிக்கும் சர்தார் 2, பிரபாசுடன் தி ராஜா சாப் ஆகிய படங்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில், தான் சினிமாவில் அறிமுகமாக, நடிகர் மம்முட்டி உதவியதாக கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "மம்முட்டி மகன் துல்கர் சல்மான் நடிக்கும் ஒரு படத்தில் ஜோடியாக நடிக்க கதாநாயகியை தேடி வந்தனர். அப்போது என்னைப் பார்த்த மம்முட்டி, நான் அவருடைய மகனுக்கு சரியாக இருப்பேன் என எண்ணி அதில் நடிக்க வாய்ப்பளித்தார்" என்றார்.

கடந்த 2013ஆம் ஆண்டு வெளியான படம் 'பட்டம் போலே'. அழகப்பன் இயக்கிய இப்படத்தில், துல்கர் சல்மான் மற்றும் மாளவிகா மோகனன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.





# மனந்திறந்த நித்தியா

2006ஆம் ஆண்டு கன்னட படத்தின் மூலம் சினிமாவில் நடிகையாக அறிமுகமானவர் நித்யா மேனன். அதன்பின், தமிழ், மலையாளம், தெலுங்கு, என தென்னிந்திய மொழிகளில் நடித்து வருகின்றார்.

கடந்த 2019ஆம் ஆண்டு வெளியான 'மிஷன் மங்கள்' படத்தின் மூலம் ஹிந்தியில் அறிமுகமான நித்யா மேனன், தொடர்ந்து, அடுத்த ஆண்டே 'பிரீத்: இன் டு தி ஷாடோஸ்' என்ற இந்தி வெப் தொடரில் நடித்திருந்தார். அதன்பின்னர் இதுவரை இந்தியில் நடிக்கவில்லை.

இந்நிலையில், இந்தியில் ஒரு சில படங்களே நடித்ததற்கான காரணத்தை நித்யா மேனன் பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "அங்குள்ள நடிகர், நடிகைகள் தங்களுடைய குணாதிசயங்களுடன் பொருந்தக்கூடிய பாத்திரத்திலும், மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான பாத்திரத்திலும் நடிக்கிறார்கள்" என்றார். அத்துடன், ஒரு நடிகையாக என்னுடைய வரம்பைப் பற்றி அவர்களுக்கு தெரியுமா என்று எனக்குத் தெரியவில்லை. பிரபல இயக்குநர் விக்ரமாதித்ய மோத்வானே உடன் பணியாற்ற விரும்புகின்றேன்" எனவும் நித்யா மேனன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 7 முறை முயற்சி



இயக்குநர் செல்வராகவன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், தான் ஏழு முறை உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சி செய்ததாக கூறியிருப்பது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வீடியோவில் இயக்குநர் செல்வராகவன் மேலும் கூறியதாவது, "உலகம் முழுவதும் பார்த்தாலும் வாழ்க்கையில் இந்த இரண்டையும் அனுபவிக்காதவர்கள் இருக்க முடியாது. ஒன்று உயிரை மாய்க்க முயற்சி, இன்னொன்று டிப்ரஷன். நான் ஏழு முறை உயிரை மாய்க்க முயற்சி செய்துள்ளேன், ஆனால், இப்பொழுது அல்ல, சில வருடங்களுக்கு முன்பு.

ஒவ்வொரு முறையும், உயிரை மாய்க்க முயலும் போது, உள்ளே ஒரு குரல் கேட்கும். ஸ்ரீஏதோ சொல்ற மாதிரி, ஏதோ கேக்குற மாதிரி இருப்பதை உணர்வேன். கடவுள் ஏதோ சொல்கிறார் என நினைத்து விட்டுவிடுவேன்.

அதன் பிறகு, 10 நாள் கழித்து, அல்லது ஆறு மாதம், ஒரு வருடம் கழித்து கூட வாழ்க்கை திடீரென மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் மாறும். அப்போது, உயிரை மாய்த்துக் கொண்டிருந்தால் எல்லாமே போயிருக்குமே என்று நான் நினைப்பேன்.

வாழ்க்கையே அதுதான். உயிரை மாய்க்க முயற்சிப்பவர்களின் உண்மையான நோக்கம் என்னவென்றால், அடுத்த ஜென்மத்திலாவது நம் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும் எனும் நம்பிக்கையே.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஒரு குடியிருப்பில் சந்தோஷமாக பிறந்து வாழ வேண்டும் என்று நினைப்போம். ஆனால், கூவத்தில் பிறந்த பன்றியாகவோ, காட்டில் மரத்தில் தொங்கும் பேயாகவும் இருந்தால் யார் என்ன செய்வது?

நமக்கு கேட்கும் அந்த குரல் கடவுளின் குரலாகவோ அல்லது வேறு யாரின் குரலாகவோ இருக்கலாம். இது உண்மையானது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.







# பார்வதியின் ஆசை

தமிழில் 'பூ' படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமான பார்வதி, கமல்ஹாசனின் 'உத்தம வில்லன்', தனுஷ் ஜோடியாக 'மரியான்', 'சென்னையில் ஒருநாள்' உள்ளிட்ட படங்களில் நடித்து இருக்கிறார்.

மலையாளத்தில் அதிக படங்களில் நடித்துள்ள அவர் விக்ரம் நடிப்பில் வெளியான தங்கலான் படத்தில் நடித்திருந்தார். இந்நிலையில், நடிகர் விக்ரமை பார்வதி பாராட்டி பேசியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "விக்ரம் எந்த ஈகோவும் இல்லாத சிறந்த நடிகர் மட்டுமில்லாமல் சிறந்த மனிதரும் கூட. 'தங்கலான்' படப்பிடிப்பில், அவர் அனைவரையும் மரியாதையுடன் நடத்தினார், அது ஒரு புத்துணர்ச்சியூட்டும் அனுபவமாக இருந்தது. அப்படிப்பட்ட நடிகர்களைப் பார்க்கும் போது, அவர்களைப்போல் இருந்தால் எவ்வளவு அருமையாக இருக்கும் என்று சில சமயம் நினைப்பேன்" என்றார்.

# மலையக இலக்கியத்தில்
# பேசப்படாத பெண் ஆளுமை



மு.நித்தியானந்தன்

சிவபாக்கியம் குமாரவேல் (1923-2019) மலையக அரசியல், தொழிற்சங்க ஊற்றிலிருந்து முகிழ்க்கிறார்.

தனது பதின்ம வயதிலிருந்தே தீவிர அரசியலில் கால் பதித்த சிவபாக்கியம், உயர்ந்த அரசியல் தலைவர்களுடன் பழகுகின்ற வாய்ப்பை அந்த வயதிலேயே பெறுகிறார்.

மிக இளம் வயதிலேயே இலங்கை இந்தியர் மாதர் ஐக்கிய சங்கத்தின் தலைவியாகும் பெரும் பொறுப்பை ஏற்கிறார். தொழிற்சங்கங்களில் ஆணாதிக்கமே மேலோங்கியிருந்த சூழலில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, தோட்டப் பெண் தொழிலாளர்களை அணி திரட்டி, பதாதைகளை ஏந்தி, சுலோகங்களைக் கோஷமிட்டு, ஊர்வலம் வந்திருக்கிறார் சிவபாக்கியம். வெற்றுக் கோட்பாட்டாளராக இல்லாமல் களத்தில் நின்ற செயலூக்கம் மிக்கவராக அவர் திகழ்ந்திருக்கிறார். வீட்டில் பணிப்பெண்ணாக திருகைக் கல்லில் மாவரைத்துக்கொண்டிருந்த லெச்சுமி பாடிய நாட்டார் பாடலின் சோகத்தில் தோய்ந்திருக்கிறது சிவபாக்கியத்தின் கவியுள்ளம்.

லெச்சுமி சொன்ன நாட்டுப்பாடல்களை அந்த மொழியிலேயே

சிவபாக்கியம் பதிவு செய்திருக்கிறார். மலையகத்தின் நாட்டுப்பாடல் தொகுதிக்கு லெச்சுமி வாயிலாகச் சிவபாக்கியம் தந்திருக்கும் இப்பதிவு புதிய சொத்தாகக் கருதத்தக்கது.

"செகப்புச் சேலையில்லே
செல்ல மகளுக்கு
நாலு பணங் கையிலில்லே
நல்ல துணி வாங்கிக்கிற..."

என்ற லெச்சுமியின் பாடலில் கசியும் ஒரு தாயின் துயரம் நம் நெஞ்சைத் தொடுகிறது.

"எங்க துன்பங்க தீரலே
தொடர்கதைய முடியலே"

என்ற தொடரில், துன்பங்கள் தீரவில்லை, தொடர்கதையும் முடியவில்லை என்ற அடிகள் நவீன வீச்சுக்குள் நாட்டார் பாடலைக் கொண்டு நிறுத்துகிறது.

"கூடை தலை மேலே குடிவாழ்க்கை கானகத்தில்" என்பது சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் பாடம். "கூடை தலை மேலே கொழந்தைங்க மடுவத்திலே" என்பது லெச்சுமியின் பாடம். நாட்டுப்பாடல் சேகரிப்பது என்ற தொழில்முறை நோக்கில் சேகரிக்கப்பட்ட சேகரம் அல்ல இது. லெச்சுமியின் பாடலில் சோகத்தையையும் இலக்கியச் சுவையையும் உணர்ந்த ஒரு கவியுள்ளத்தின் பதிவு இதுவாகும்.

இன்றுபோல், நாட்டார் இலக்கியம் புலமை ஆய்வுக்குள் கொண்டு வரப்பட்டு, நாட்டார் பாடலைச் சேகரிக்கும் ஆர்வம் முனைப்புற்றிருப்பது போலன்றி, அப்பாடல்களில் ஈர்ப்புண்டு அவற்றைப் பதிவிடும் நோக்கில், சிவபாக்கியம் ஆற்றியிருக்கும் பணி முன்னுதாரணமில்லாததாகும்.

சாதாரணமாக, இம்மாதிரி நாட்டார் பாடல்கள் சோகத்தைச் சிந்தி, தம்மைச் சுற்றிலும் இசைக்கப்பட்டு வந்த போதிலும் அவற்றை மிக எளிதாக யாரும் கவனிக்காமலே கடந்து சென்று கொண்டிருக்கும் நிலையில், அந்தப்பாடல்கள் சுமந்து கொண்டிருக்கும் துயரை அவதானித்து, அவற்றைக் கூர்மையாகக் கேட்டிருக்கிறார் சிவபாக்கியம். போதிய கவன ஈர்ப்பு இல்லாத ஒரு காலப்பகுதியில் அவர் தனித்து நடை பயின்றிருக்கிறார். காலம் கடந்தாயினும் அவரது பதிவுகள் இன்று அச்சு வாகனம் ஏறுவது மகிழ்ச்சி தருவதாகும்.

பாரதியின் பாடல்களில் ஈர்ப்பு மிக்கவராக சிவபாக்கியம் திகழ் ந்திருக்கிறார். தனது முதல் கவிதைத் தொகுதியில், "பிறநாட்டு நல்அறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல்வேண்டும்; இறவாத புகழ் உடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்; மறைவாக நமக்குள்ளே பழம்கதைகள் சொல்வதில்ஓர் மகிமை இல்லை; திறமான புலமைஎனில் வெளிநாட்டோர் அதைவணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் பாடலை தன் கவிதையின் ஆரம்பப் பக்கத்திலே பதிவிட்டிருக்கிறார். புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டி நிற்கிறார் சிவபாக்கியம். "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்த்தருவோனாகிறான்" என்று மகாகவி பாரதி 'பாஞ்சாலி சபதம் ' (1912) என்ற தனது காவியத்திற்கு எழுதிய முன்னுரையிலே குறிக்கிறார்.

"தமிழ் வளர்ச்சிக்குத் தமிழர்கள் தமிழ்த் தொண்டு புரிந்து தமிழ் நாட்டில் தமிழரசை நிலைநாட்டவேண்டுமானால், கரடு முரடான தமிழில் நூல்கள், கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதை விடுத்து, எல்லோருக்கும் எளிதில் விளங்கக்கூடிய வகையில், சாதாரண எளிய நடையில் எழுதுவதே சிறந்த கடமையாகும் என்பதே எமது நோக்கமாகும்" என்று பாரதியின்



அடையையொற்றி சிவபாக்கியம் குமாரவேல் தனது நூலின் முன்னுரையில் குறிப்பது நோக்கத்தக்கது.

சிவபாக்கியம் தன் 'ஹிதயகீதம்' அல்லது என் அஞ்சலி' என்ற படைப்பை 'வசனகாவியம்' என்றே குறிக்கிறார். 54 பாடல்கள் கொண்ட தனது வசனகாவியம் தமிழில் தான் தந்திருக்கும் புதிய நூல் என்பதை பிரக்ஞைபூர்வமாகவே அறிக்கையிடுகிறார்.

சிவபாக்கியம் அவர்களின் சிந்தனைத் தளத்தில் தீர்க்கமான பாதிப்பை ஏற்படுத்தியவராக வங்கக்கவி தாகூர் முக்கியம் வகிக்கிறார்.

"இந்திய மொழிகள் அனைத்திலும், கவிஞர்கள் செய்யுள் இலக்கணத்திலிருந்து விடுபட்டு, நவீன கவிதைக்கு வருகின்ற போக்கை 1913இலேயே தாகூர் கையாண்டது அவரது ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. தாகூரின் முன்னெடுப்பை அடுத்து இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள கவிஞர்களும் இலக்கணம் இல்லாத கவிதை எழுத வந்தார்கள். இந்திய மொழிகளில் கவிதை விடுதலை அடைவதற்கும் நவீனமடைவதற்கும் தாகூர்தான் மூலகர்த்தாவாக இருந்து வந்திருக்கிறார்" என்று ஞானக்கூத்தன் பதிவுசெய்கிறார்.

தாகூர் இலங்கைக்கு மூன்றாவது முறை விஜயம் செய்தபோது, யாழ்ப்பாணத்திற்கும் சென்று, ஒரு வாரம் தங்கியிருந்து, இரண்டு முக்கிய உரைகளையாற்றியும், தனது நாட்டிய நடனத்தையும் கவிதை வாசிப்பையும் நிகழ்த்தியிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் தாகூரின் விரிவுரை றீகல் தியேட்டரில் 13.06.1934இல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோது, மண்டபம் நிறையவில்லை. 13ஆம் திகதி மாலை ஏன் றீகல் தியேட்டரில் மக்கள் திரளவில்லை என்பதை விளங்கிக்கொள்வது கஷ்டமாயிருக்கிறது. "ஒருவேளை, அந்த நிகழ்ச்சி எவ்வளவு அரியது என்பதை மக்கள் அறிந்திருந்தால் மக்கள் அந்த அரங்கை நிறைத்திருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை" என்று யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் ஜோன் பிக்னெல் பாதிரியார் பதிவு செய்கிறார்.

யாழ்ப்பாணத்தில் தாகூர் ஆற்றிய உரையில், "நீங்கள் ஊமையர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் ஆத்மாவின் குரலை நான் கேட்டதில்லை. நீங்கள் உன்னத இலக்கியங்களைப் படைக்கவில்லை. சிரஞ்சீவித்துவம் கொண்ட- இறவாப்புகழ் மிக்க சிருஷ்டிகளை நீங்கள் ஆக்கவில்லை. தமிழ் மக்கள் தமது கடந்த காலங்களை ஆராதிப்பதிலும், புகழ்மிக்க தமது முன்னோரை வழிபடுவதிலுமே தமது காலத்தைக் கடத்தி வந்துள்ளனர்" என்று குறித்திருக்கிறார்.

'தாகூரும் யாழ்ப்பாணத்தவரும்' என்ற தலைப்பில் தா.சனாதனன் தனது 'தாகூரின் யாழ்ப்பாண வருகை, கலை, அடையாளம், கருத்தாடல்'(2021) என்ற நூலில் மிகச் சிறந்த பதிவைத் தந்திருக்கிறார். கலாயோகி ஆனந்தகுமாரசாமியை தாகூர் ஒரு ஆங்கிலோ- இந்தியன் ஆகவே அடையாளங் கண்டிருந்தார். ஆனந்தகுமாரசாமியின் மகன் தனது தந்தையை சிங்களவர் என்றே ஒரு பேட்டியில் குறிப்பிடுகிறார்.

ஆனால், தாகூரின் வயப்பட்டவராகத் திகழ்ந்த சி.வி.வேலுப்பிள்ளை தன் கல்வி முடியுமுன்னரே, தாகூர் இலங்கை வந்தபோது அவரிடம் கொடுத்து ஆசி பெறுவதற்காகவே 'விஸ்மாஜினி' என்ற நாடகநூலை 1934இல் அச்சிட்டு, அவருக்கே அந்த நூலை அர்ப்பணம் செய்திருந்தார். 'குருதேவ் தாகூரை நேரில் சந்தித்துப் பேசும் பேறு பெற்றவர் இவரே' என்று சாரல்நாடன் குறிப்பிடுகிறார். தாகூரைப் பற்றி சி.வி. வீரகேசரியில் எழுதிய கட்டுரையில், தாகூரின் எழுத்துகளில் கவிதையும் இசையும் இணைந்து பரிமளிப்பதையும், அவரின் கவிதைகள் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பக்திப்பாடல்கள் போன்றன என்று சி.வி. எழுதுவதையும் சாரல்நாடன் பதிவு செய்துள்ளார்.

பரமஹம்சதாசன் என்ற மலையகக் கவிஞர் தாகூரின் கவிதையில் தோய்ந்து, 'தீங்கனிச் சோலை', 'கவிதைமணி மாலை' என்று தாகூரின் கவிதைகளை இரண்டு நூல்களில் மொழியாக்கம் செய்திருக்கிறார். அவரின் 'கவிதைமணி மாலை' என்ற நூல் கிடைப்பதற்கரியதாக உள்ளது.

கவி தாகூர் இயற்றிய 'கீதாஞ்சலி'யின் கவிதையில் ஆழ்ந்து, சிவபாக்கியம் தனது கவிமலரை 'ஹிதய தீபம் அல்லது என் அஞ்சலி' என்ற தலைப்பில், புதுக்கவிதையாய் மலையகக் கவிதை உலகிற்கு மணி ஆரம் சூடியிருக்கிறார்.

'இந்நூலின் தளகர்த்தன் இறைவன்' என்று சிவபாக்கியம் குறிக்கிறார். இறைவனை ஒரு படைத் தலைவனாகக் காண்கிறார்.

"அந்தோ! கிழக்கு வீதியிலே சாந்தப்போர் நடக்கிறது! அந்த யுத்த முனையிலே கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும் ஒவ்வொரு வீரரையும் சாந்தமெனும் தளபதி ஆசிர்வதிக்கின்றான்" (இதயதீபம் 19)

"என் அன்பின் அருளே! என்னைப் போர்முனைக்கு அனுப்பும் பொழுது ஒரு சிறிதும் கலக்கமடையாதே. மனோதிடத்துடன் என் அருகினில் நின்று நிம்மதியற்று உழன்று கொண்டிருக்கும் என் மனமெனும் பரட்டைத் தலையைச் சீவி முடித்துவிட்டு, என்னில் காணும் தன்னலம், அச்சம், கோழை எனும் பழம் போர்வையும் களைந்து, வீரம், தைரியம், தியாகம் எனும் புதிய போர் உடைகளை அணிவித்து, உறுதி எனும் வீரவாளை உருவி என் கையில் எடுத்துக் கொடுத்து, எட்டுத் திக்கும் வெற்றி முரசு முழங்க எனை நீ வழியனுப்புவாயோ எனில், அதுவே எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். அதன்பின் உனது வீடு தேடி நான் வராமல் மடிவேனாயினும், வீர சுவர்க்கமடைவேன்" (இ.தீ 20)

"யான் உனக்காகப் பாடும் பாக்களின் ஒவ்வொரு அடியும், சுதந்திர மண்டபத்திற்குச் செல்லும் படிகளாகும். தனி ஒரு மனிதனும் அப்படிகளில் ஏறிச் சென்று, சுதந்திர மண்டபத்தை அடையவே முற்படுகின்றான். ஆனால், அடக்குமுறை ஆதிக்கம் எனும் காவற் பட்டாளங்கள் சுதந்திர வாயிலின் இரு புறங்களிலும் நின்று கொண்டிருக்கின்றன.

இருப்பினும் மனிதன் ஓரிரண்டு படிகளைச் சாத்வீகமெனும் புரட்சியை ஆரம்பித்துத் தாண்டிச் செல்கின்றான். உறுதி, நம்பிக்கை, வீரம் ஆகியன அவனது ஆத்மாவில் இடம் பெற்றுவிட்டன"(இ.தீ 24)

"என் இன்ப துன்பங்களையும் பொருட்படுத்தாது, பேரின்பமெனும் பெரும் போரை ஆரம்பித்து அதிலே வெற்றிக்கொடியை நாட்டும் நாள் சமீபித்து விட்டது... தைரியம், வீரம், தியாகம், அன்பு, சாந்தம், உண்மை முதலியன படைத்த ஊழியர்களைத் திரட்டுவதில் இறைவ!நீ கங்கணம் கட்டிப் புறப்படுவாயாக" (இ.தீ.27) சாத்வீகம், சாந்தம் எனும் சுதந்திரப் போரில், தன்னலம், அச்சம், மடமை, கோழைத்தனம் ஆகியவற்றைக் களைந்து, வெற்றி காணும் பெரும் போரில் தங்களுக்குத் தலைமை தாங்கும் தளகர்த்தனாக இறைவனைக் காண்கிறார் சிவபாக்கியம்.

இந்த 'இதய தீபம்' என்ற கவிபாமாலையில் இறைவனை ஒளியாக, ஜோதிப்பெருக்காக, ஞானவிளக்காக, ஜோதிப்பெருங்கடலாக, ஞானகுருவாக, மௌனகுருவாக, ஆனந்த மூர்த்தியாக, பரமபிதாவாக, தேவியாக, அமிர்தமாக, இசையமுதாக, மணிவிளக்காக, தீனபந்துவாகவெல்லாம் அழைத்துப் புலம்புகிறார்.

"அலைந்து அலைந்து திரியும் எனது ஆவிக்கு நீ என்றுதான் இன்பத்தைப் பொழிவாய்? என்றுதான்வி மோசனமளிப்பாய்?" என்று கவி ஏங்குகிறார். கவி காணும் தெய்வமோ தொட்டுவிடும் தூரத்திலேயே நிற்கிறார். இறைவனது ஆலயத்தை வந்தடைந்து, கதவைத் தட்டுகிறார். ஆனால், அவரது கருணைக் கதவு இன்னும் தாளிடப்பட்டிருக்கிறது என்று மாய்கிறார்.


"இன்னும் எனக்காக ஒரு பாதையேனும் பண்படுத்தப் படவில்லை. இருள் சூழ்ந்த வழி நெடுகிலும் விளக்கென்பதுங் காணப்படவில்லை. இரு கண்களும் திறக்கப்படவில்லை. ஆனதால் நான் வழி நெடுகச் சென்று பிரகாசத்தைக் காணக் கடுங் கஷ்டமடைகிறேன்" என்று சிவபாக்கியம் துயருறுகிறார்.

இறைவனை அவர் இயற்கையில், நீர்வீழ்ச்சியில், புஷ்பங்களின் வாசனையில், பூஞ்சோலையில் அசையும் மெல்லிய காற்றில், வெள்ளி நிலவில், மரத்தடியில்,ஆலயத்தின் பூஜை மணியில், செஞ்சேவலின்

சிறகடிப்பில், இன்ப இரவில், ரோஜா மலரில், இனிய குழலோசையில், நதியில் ஓடும் நீரிரைச்சலில், பெருமழையில்,புயற்காற்றில்,இடிமின்னலில் எல்லாம் காண்கிறார்.

"நள்ளிரவில் தாகங் கொண்டு என்னை நீ தேடி வரும்பொழுது, நின் சதங்கை ஒலி கேட்டு விழித்துக் கொண்டேன். ஆனால், நீயோ





என்னுடன் யாதும் பேசாது மௌனமாக வந்து உனக்காகப் பொற்சிமிழில் வைக்கப்பட்டிருந்த சாந்தி மதுவை அருந்திவிட்டு எங்கேயோ சென்று விட்டாய் என்ற கவியின் வரியில் இறைவனோடு அவர் கொள்ளும் நேசமும் பக்தியும் இழைகின்றன.

பரமபிதாவைத் தேடும் ஆத்மீகச் சிந்தனையில் கவி ஆழ்ந்து தோய்ந்து போனாலும் , புழுதி மண்ணில் பலவீனமடைந்து கிடப்பவர்களுக்காகவும், தோல்வியடைந்தவர்களுக்காகவும் முரசறையும் போர்முழக்கத்தையும் சிவபாக்கியத்தின் கவிதை வரிகளிலே கேட்கமுடிகிறது.

"எந்த இடத்தில் அன்பு இல்லையோ, எங்கே துன்பமும் வறுமையும் அதிகமாகக் காணப்படுகிறதோ, எங்கே அக்கிரமங்களும் படுகொலைகளும் மலிந்து கிடக்கின்றனவோ, எங்கே பெரும் யுத்தத்தில் இரத்தக் களறி ஏற்படுகின்றதோ, எங்கே வகுப்பு வெறி, மத வெறியெனும் குண்டுகள் பாய்கின்றனவோ, எங்கே பொறாமை, ஆசை எனும் ஈட்டிகள் ஊடுருவிச் சென்று மானிடரை மாய்க்கின்றனவோ, அங்கெல்லாம் நின் கருணை, சாந்தம், சமதை, சத்தியம், அஹிம்சை எனும் விரிந்த புஷ்பங்களை வாரி இறைத்துக்கொண்டு செல்லும்போது,அங்கெழுந்த பயங்கர சக்திகள் அனைத்தும் காலைக் கதிரோனைக் கண்ட பனி போன்று இமைப்பொழுதில் மறைந்தொடுங்கி விட்டன'என்று பூபாளம் இசைக்கிறார் சிவபாக்கியம். சிவபாக்கியத்தின் இந்தக் கவிதை வரிகள், வங்கக் கவி தாகூரின் கீதாஞ்சலியை எதிரொலிக்கின்றன.

"எங்கே மனம் பயமற்று விளங்குகிறதோ, எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறது, எங்கு அறிவு சுதந்திரத்துடன் ரொலிகிறதோ, எங்கு குறுகிய சாதிமதப் பிளவுகளால் உலகம் உடையாமல் உருப்பெற்றிருக்கிறதோ, எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ, எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கிக் கைகளைப் பரப்புகிறதோ, எங்கு பகுத்தறிவெனும் தெளிந்த ஆறு மாண்டொழிந்த பழக்கங்களான பயங்கரப்பாலை மணலில் பாயாது மீள்கிறதோ, எங்கே விரிந்த சிந்தனையிலும் செயலிலும் எ னது உள்ளத்தை நினது அருள் இழுத்துச் செல்லுகின்றதோ, அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில், எனது அப்பனே, எனது நாடு விழித்தெழுவதாக! (தமிழாக்கம்: வி.ஆர்.எம்.செட்டியார்) பஞ்சை பராரிகளை, உழைத்து வறுமையில் வாடும் ஏழைகளின் விடுதலை கோரி கவியரசர் தாகூர் கவி இசைக்கிறார்.

"ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்றாய்? கண்ணைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்து கொள்! கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிறான்.

அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான், வெயிலில் உலர்கிறான். அவன் ஆடையில் தூசி படர்ந்திருக்கிறது. உன் காஷாயத்தைக் களைந்தெறி; அவனைப்போலவே நீயும் புழுதியில் இறங்கி வா! விடுதலை? எங்கிருந்து விடுதலை கிடைக்கும்? நம் ஆண்டவனே நம்மீது அருள் சுரந்து சிருஷ்டித்தளைகளை தன் மேனியில் பூண்டிருக்கிறான் என்றும் நம்மை விட்டுப் பிரிய முடியாமல் அவன் இணைக்கப்பட்டிருக்கிறான்.

பூவையும் நறும் புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா!

உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து நின் ஈசனைக்கண்டு கொள்!" தமிழாக்கம்: வி.ஆர்.எம்.செட்டியார்)

மலையகத்தின் பெருங் கவி சிவபாக்கியம் வறுமையில் வாழும் ஜீவிகளுக்காகக் குரல் எழுப்புகிறார்.

"இம்மாயை உலகில் நான் மிகவுந் தாழ்மையுடன் உன்னிடம் மன்றாடிக்கொள்வதென்ன? என் வாழ்நாட்கள் பூராவும் என் சகோதரனான குஷ்டரோகிக்குச் சிகிச்சையளித்து அவனுக்குத் திருப்திகரமான பணிகளைச் செய்யவேண்டும். வறுமையிலும் துன்பத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மக்கட்கு, வறுமையும் துன்பமும் நீங்கி வாழும் வழிவகைகள் செய்ய வேண்டும். தரித்திர திசையையடைந்த என் எளிய சகோதரனிடத்தில் அன் அன்பைச் செலுத்த வேண்டும். தெருக்களில் அதோ! புன்முறுவலுடன் குப்பை கூட்டிப் பிழைக்கும் பாமரனிடம் அளவற்ற பிரீதி நான் கொள்ள வேண்டும். இத்தகையோரின் வாழ்நாட்களில்தான் நீ குடி கொண்டிருக்கிறாய். அவர்களின் பழங்குடிசைகளில் ஒவ்வோர் இரவிலும் நீ தாண்டவம் புரிகின்றாய்!

கௌபீனம் தரித்த அவ்வேழையிடம் அதிகார மமதையில்லை. மனிதனை மனிதன் ஆதிக்கஞ் செலுத்தும் கொள்கை அவனிடம் ஒருபோதும் இல்லை. திருடரின் பயம் அவன் அறிவதில்லை. பழங்கஞ்சியை அருந்திவிட்டு, அதோ! கட்டாந்தரையில் சஞ்சலமற்ற ஒரு பொருளாக அமைதியுடன் உறங்குகின்றான்.

நடுநிசியில் நித்திரையிலே உன்னைத்தான்
பிரார்த்திப்பதாகக் கனவு கண்டு கொண்டிருக்கின்றான். அவனின் வாழ்க்கையே புனிதம்!

ஆதலால், என் கண்மணியே! நான் எதை நீயென உணர்கின்றேனோ அந்த உணர்வினில்
நீ பிரதிபலிப்பாயாக! மலையக மக்களின் வாழ்வில் பூரண பங்கெடுத்த இம்மாதரசி ஏழையின் வியர்வையில் இறைவனைக்கண்டதில் வியப்படைய எதுவுமில்லை. மலையகத்தின் புதுக்கவிதை வாய்க்காலுக்கு நீர் சுரந்த முன்னோடியாகத் திகழும் சிவபாக்கியம் குமாரவேல் அவர்களின் பெயர் மலையக இலக்கியத்தில் என்றும் நிலைத்திருக்கும்.



# கௌரவமான மரணம்




லத்தீப் பாரூக்

பலஸ்தீன மக்களின் ஊக்கமருந்தாக செயற்பட்ட, அவர்களால் அபு இப்றாஹிம் என அன்போடு அழைக்கப்பட்ட அந்த மக்களின் தலைவர் யஹ்யா சின்வர் 2024 ஒக்டோபர் 17 வியாழக்கிழமை அன்று இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்டார்.

காசாவில் இனப் படுகொலை புரிந்து வருவதாக சர்வதேச நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டுள்ள இஸ்ரேல் பிரதமர் நெத்தன் யாஹூ தான் இந்தப் படுகொலையினதும் சூத்திரதாரி. யஹ்யா சின்வர் தனது தேசத்தின் விடுதலைக்காகவும், இஸ்ரேல், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா மற்றும் அரபுலக சர்வாதிகாரிகளால் மிகக் கொடூரமாக மறுக்கப்பட்டு வரும் தனது தேசத்து மக்களின் சட்டப்பூர்வமான அடிப்படை சுதந்திரத்துக்காகவும் தனது உயிரையே தியாகம் செய்துள்ளதாக அந்த மக்கள் அவரைப் போற்றுகின்றனர். சியோனிஸ யூத அபகரிப்பாளர்களிடம் இருந்து தமது தேசத்தை மீட்டெடுக்கும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க விடுதலைப் போரைத் தொடர்ந்து முன்னெடுக்க ஆயிரக்கணக்கான யஹ்யா சின்வர்கள் தயாராக இருக்கின்றனர் என்று ஜோர்தான் தலைநகரில் இடம்பெற்ற ஒரு ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் கூச்சலிட்டார்.

துனீஷியாவின் முன்னாள் ஜனாதிபதி முன்சிப் மர்சூகி குறிப்பிட்டுள்ள படி, ஷின்வர் ஒரு பதுங்கு குழிக்குள் மறைந்திருந்த போது, கொல்லப்படவில்லை. அவ்வாறான உரிமை கோரல் முற்றிலும் பொய்யானது. மாறாக அவர் களத்தில் இராணுவ சீருடையில் கையில் ஆயுதம் ஏந்தி போராடிக் கொண்டே உயிர் நீத்தார். அவர் பிறந்த மண்ணை பாதுகாப்பாதற்காக அதே மண்ணில் தான் அவர் மாண்டார்.

2024 ஜுலை 31இல் ஈரானின் தலைநகர் டெஹ்ரானில் பலஸ்தீனத்தின் கீர்த்தி மிக்க தலைவர் இஸ்மாயில் ஹானியா கொல்லப்பட்டு மூன்று மாதங்களின் பின் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. அன்று முதல் ஹமாஸ் இயக்கத்தின் தலைமை பொறுப்பை ஏற்ற சின்வர், தனது தலைமையின் கீழ் ஹமாஸின் இராணுவ மற்றும் அரசியல் செயற்பாடுகளை ஒன்றிணைத்தார்.

மரபு ரீதியாக ஹமாஸில் மூன்று அதிகார தளங்கள் இருக்கின்றன. ஒன்று பலஸ்தீனத்துக்கு வெளியில் செயற்படுகின்றது. மற்றது ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ளது. இன்னொன்று காசாவில் உள்ளது.

யஹ்யா சின்வரின் கொலை குறித்து முதல் தடவையாகப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்ட ஹமாஸ் அரசியல் பணி பீடத்தின் உறுப்பினர் பாஸெம் நயீம் எங்களது அமைப்பு அதன் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று சூளுரைத்தார். எமது தலைவர்களைக் கொல்லுவது எமது இயக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடும் என்றும் பலஸ்தீன மக்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து விடும் என்றும் இஸ்ரேல் நம்புகின்றது. ஹமாஸ் இயக்கத்தின் ஸ்தாபகர்களான ஷேக் யாஸின் மற்றும் அப்துல் அஸீஸ் அல் றன்திஸி ஆகியோரை அவர்கள் கொன்றார்கள், அந்த ஒவ்வொரு மரணத்தின் பின்னரும் ஹமாஸ் உறுதியாகவும் பிரபலமாகவும் வெளிப்பட்டது. எமது எதிர்கால போராட்டத்துக்கான அடையாளச் சின்னமாக அந்த தலைவர்கள் மாறினார்கள். சுதந்திர பலஸ்தீனத்தை நோக்கிய எமது வருங்கால தலைமுறையின் பயணத்துக்கான வழிகாட்டிகளாக அவர்கள் திகழ்கின்றார்கள்

‘சுதந்திரத்துக்காகவும் சுய கௌரவத்துக்காகவும் போராடிக் கொண்டு அதற்காக காத்து நிற்கும் மக்கள் பிரிவால் தலைமை தாங்கப்படும் ஒரு அமைப்பே ஹமாஸ். அதை ஒருபோதும் அழித்து ஒழித்து விட முடியாது’ என்று கூறினார் பாஸெம் நயீம். 2006 முதல் காஸாவை நிர்வகிக்கத் தெரிவு செய்யப்பட்ட ஹமாஸ் இஸ்ரேலை ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை.

சின்வரைப் பற்றி மக்கள் என்ன நினைத்தாலும் சரி, அவர் ஒரு ஹொலிவூட் ஹீரோவைப் போலவே மரணம் அடைந்துள்ளார் என்று சமூக ஊடக அவதானிப்பாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். “மரணத்தைத் தழுவி வீழ்ந்து கிடக்கும் தனது சகாக்களின் மத்தியில் ஒரே ஒருவன் மட்டும் நிற்கின்றான். அவனை தூசிப்படலம் சூழ்ந்துள்ளது. எதிர்த்து வரும் தீமைகளின் நடுவே அவன் தனியாக உயிரோடு நிற்கிறான். தனது எஞ்சியுள்ள ஒரே கரத்தால் மட்டுமேனும் அவன் போராட முனைகிறான். தனது கைக்கு எட்டிய பலகைத் துண்டை தூக்கி தன்னை நோக்கி வரும் மூளையற்ற அந்த டிரோன் இயந்திரத்தை அவன் தாக்குகின்றான். ஆனால், ஒரு கோழை அந்த இயந்திரத்தின் பின்னால் இருந்து அதை இயக்குகின்றான். இது ஒரு டேர்மினேட்டர் திரைப்படக் காட்சி போல் தெரியலாம். ஆனால் அது அப்படி அல்ல. அது நிஜமானது” என்று அந்த வர்ணனை அமைந்துள்ளது.

மிகவும் கவனமாக இருந்து கொள்ளுங்கள் என்று தனக்கு ஆலோசனை கூறிய தனது சகாக்களிடம் சின்வர் கூறினார் “இந்த எதிர்ப்பு யுத்தத்தில் முன்னரங்க நிலையிலிருந்து போராடும் எந்த ஒரு போராளியினதும் உயிரை விட எனது உயிர் எந்த வகையிலும் முக்கியமானது அல்ல. உண்மையான தலைவர்கள் முன்னரங்கில் நின்று போராடுவார்கள். ஒருவேளை நான் மாண்டால், தலைமை தாங்கக் கூடிய மற்றவர் ஏற்கனவே தயார் நிலையில் இருப்பார்” என்று கூறினார். சின்வர் தனது உயிரைப் பற்றி ஒரு போதும் கவலைப் பட்டதில்லை என்பது அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் மிகத் தெளிவாகப் பதிவாகி உள்ளது. அன்றாடம் செத்து மடியும் சிறுவர்களின் உயிரை விட தனது உயிர் பிரதானமானது என அவர் ஒரு போதும் கருதவில்லை.

2018இல் சின்வர் வழங்கிய ஒரு செவ்வியில் “இருப்பவற்றை நாசமாக்குவதை விட பலஸ்தீனத்தின் எதிர்காலத்துக்கான ஒரு தேசத்தைக் கட்டி எழுப்புவது தான் ஹமாஸின் குறிக்கோள் என்று கூறினார். நான் இனி மேலும் சண்டையிட மாட்டேன் என்று கூறவில்லை. ஆனால், இனிமேலும் யுத்தம் வேண்டாம் என்று தான் நான் கூறுவேன். காசாவில் இஸேரலின் முற்றுகை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். அந்தி மயங்கும் வேளையில் நாம் கடற்கரையில் உலாவ வேண்டும். கடலை சுற்றி உள்ள உலகம் எவ்வளவு அழகானது என்பதை இந்த வாலிபர்கள் காண வேண்டும். அந்தக் கடல் கரையில் அமர்ந்து அவர்கள் கதை பேச வேண்டும். அது திகைப்பை அளிக்க வேண்டும். எல்லோருக்கும் அது திகைப்பாக அமைய வேண்டும். அவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும்”

சின்வர் கொல்லப்பட்டதும் மகிழ்ச்சியில் திளைத்த அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் ஜேர்மன் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகளால் பென்ஜமின் நெத்தன்யாஹ{வை பூரிப்படைய வைத்துள்ளனர். அவரது தலைமைக்கு தமது அளப்பரிய ஆதரவைத் தெரிவித்துள்ளதன் மூலம் 23 இலட்சம் மக்கள் மீதான இனச் சுத்திகரிப்பு படுகொலைகளுக்கும் அவர்கள் வெளிப்படையான தமது ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இனப்படுகொலை பைடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது பாராட்டைத் தெரிவித்ததாக வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது. பைடன் வெளியிட்ட அறிக்கை பெரும்பாலும் ஒரு சியோனிஸ வாதியால் தான் எழுதப்பட்டிருக்கும். “எமது புலனாய்வு உதவியோடு இஸ்ரேல் பாதுகாப்புப் படை ஹமாஸ் தலைவர்களைத் தொடர்ச்சியாகக் குறி வைத்தது. அவர்களை அவர்களது மறைவிடங்களிலிருந்து வெளியே கொண்டு வந்து ஓட விட்டது. இன்று எவ்வாறேனும் உலகில் எந்தவொரு பயங்கரவாதியும் நீதியிடம் இருந்து தப்பி ஓட முடியாது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது எவ்வளவு காலம் சென்றாலும் சரி” ஹமாஸின் தலைமைத்துவத்தையும் அதன் இராணுவ கட்டமைப்பையும் முற்றாகத் துவம்சம் செய்யும் முழு உரிமை இஸ்ரேலுக்கு இருக்கின்றது. என்று அந்த அறிக்கை தொடருகின்றது.

சின்வர் கொலை பற்றிய பைடனின் இந்தக் குறிப்பானது ஒரு பாஸிஸ தலைவரால் சொல்லப்பட்டதாக இருக்க வேண்டும் என்று ஒரு பத்தி எழுத்தாளர் குறிப்பிடுகின்றார். இன ஒழிப்பு படுகொலைகளைகளையும் ஏனைய கொலைகளையும் ஒரு ஜனநாயக தலைமைத்துவத்தால் வரவேற்க முடியாது. அந்த செயற்பாடுகளைச் சட்டப்பூர்வமான கொள்கையாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது. ஜனநாயகபூர்வமான அரசுகளைத் தலைகுனிய வைப்பதாக அது அமையும். சர்வதேச சட்டங்களை மீறி சர்வதேச குற்றங்களைத் தழுவிக் கொள்வதாக அது அமையும்.

பைடனின் கூற்று அமெரிக்க அரசியலில் ஏனைய மட்டங்களில் மட்டுமன்றி பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி என ஏனைய நாடுகளின் தலைமைகளிலிருந்தும் இதே கூற்று எதிரொலித்துள்ளது. ஒக்டோபர் ஏழு தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சின்வர் ஒரு யுத்தக் குற்றவாளி என அமெரிக்க செனட்டர் பேனி செண்டர்ஸ் வர்ணித்துள்ளார்.

ஏகாதிபத்திய ஆதிக்க சக்திகளின் இஸ்ரேலுக்கு ஆதரவான கூற்றுக்களும் அறிக்கைகளும், தற்போது மிக மோசமானதோர் புதிய கட்டத்தை நோக்கி நகர்ந்து வரும் காசா இனப் படுகொலைகளுக்கான அங்கீகாரமாகவே காணப்படுகின்றன. காசாவில் பெரிய அளவிலான பட்டினிச் சாவையும் ஏற்படுத்தி பலஸ்தீன மக்களை மொத்தமாக அழித்து விடுவதே தனது குறிக்கோள் என்பதை இஸ்ரேல் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றது.

ஒரு வருட மோதல்களின் பின் ஹமாஸ் இயக்கத் தலைவரின் கொலையானது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் நிலையையே ஏற்படுத்தும். இதைத் தான் மேற்கொண்டு வரும் அதிகளவான படுகொலைகளை நியாயப்படுத்த இஸ்ரேல் பயன்படுத்திக் கொள்ளும் என்று டிலன் பெர்னான்டஸ் என்ற பத்தி எழுத்தாளர் சுட்டிக்காட்டி உள்ளார்.

நாடுகளில் அதிகாரத்தில் உள்ளவர்கள் கூட இந்த படுகொலை முன்னறிவிப்புக்களில் தான் தங்கியிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால், இஸ்ரேலின் இலக்கு ஒரு போதும் முழுமையாக நிறைவேற்றப்படக் கூடியது அல்ல. இஸ்ரேலின் இரத்த வெறிக்குப் பதில் அளிக்கும் வகையில் அர்ப்பணத்தோடு அவர்களை எதிர்த்துப் போராடக் கூடிய பலஸ்தீனர்களும் இன்னும் பல அரபு மக்களும் இருக்கின்ற வரைக்கும் இது சாத்தியமாகப் போவதில்லை.

இனப்படுகொலையில் அமெரிக்கா வழங்கி வந்த நீண்டகால பங்களிப்பு சின்வரை கண்டு பிடிப்பதிலும் உதவியது. ஹமாஸ் தலைவரைக் கண்டு பிடிக்க மிகப் பெரிய அளவிலான வளங்களை பைடன் நிர்வாகம் ஈடுபடுத்தி உள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. அந்த வகையில் இஸ்ரேலுக்கு நிலத்தின் அடியில் ஊடுருவி வேவு பார்க்கக் கூடிய ராடார் கருவி வழங்கப்பட்டது. சின்வரின் தொலைத் தொடர்புகளை இடைமறிக்கும் ஆற்றல் கொண்ட அமெரிக்க உளவுப் பிரிவு ஏஜண்ட்டுகளும் அங்கு அனுப்பப்பட்டனர்.

ஹிஸ்புல்லாவின் கீர்த்தி மிக்க செயலாளர் நாயகம் ஹஸன் நஸ்றுல்லாஹ் செப்டம்பா மாதம் லெபனானின் பேரூட் நகரில் வைத்துத் தீர்த்துக் கட்டப்பட்டது போல் சின்வரின் கதை முடிக்கப்பட்டதும் இஸ்ரேலின் மரண வடிவமைப்புக்களின் அடையாளச் சின்னமாகவே அமைந்துள்ளது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஒட்டப்பட்டிருந்த ஒரு சுவரொட்டி

கடந்த 12 மாதங்களாக சின்வர் காசாவில் தான் இருந்தார். இஸ்ரேலுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு அவர் தொடர்ச்சியாகத் தலைமை தாங்கினார். மிகவும் துணிச்சலாகவும் விவேகமாகவும் அவர் இஸ்ரேலை எதிர் கொண்டார். அதன் காரணமாக இஸ்ரேல் தனது படுகொலைகளுக்குச் சர்வதேச மட்டத்தில் கிடைத்து வரும் ஆதரவு போதாது என உலக அரங்கில் உளறிக் கொண்டு திரியும் நிலை ஏற்பட்டது. மேலைத்தேச கூட்டான்மை ஊடகங்களில் சின்வர் இஸ்ரேலை அழிப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஒரு கொலைகார அரக்கனாகச் சித்திரிக்கப்பட்டார். இந்த வர்ணனைகளும் இஸ்ரேல் தனது பணியைச் செய்து முடிக்க ஒரு வகையில் உதவியாக இருந்துள்ளன.

இஸ்ரேலால் மிகவும் தேடப்பட்டு வந்த நபரான 62 வயதான சின்வர் காசாவின் தென் பகுதியில் கான் யூனுஸ் பகுதியில் ஒரு அகதி முகாமில் பிறந்தவர். ஹமாஸ் ஸ்தாபகர் அஹமத் யாஸினுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தவர். ஹமாஸின் உள்ளக பாதுகாப்பு பிரிவை நிறுவியவர். இஸ்ரேல் இராணுவத்தோடு ஒத்துழைத்துச் செயற்பட்டதாகக் கூறப்படும் பலஸ்தீனர்களைக் கொன்றார் என்ற குற்றத்தின் கீழ் இஸ்ரேலில் 23 வருடம் சிறைவாசம் அனுபவித்தவர்.

சிறையிலிருந்த காலப்பகுதியில் சின்வர் இஸ்ரேல் பத்திரிகைகளை வாசித்தே ஹீப்று மொழியையும் கற்றுக் கொண்டார். இது தனது எதிரியை மிகச் சிறந்த முறையில் புரிந்துகொள்ள தனக்கு பெரும் உதவியாக அமைந்தது என்று அவர் கூறியுள்ளார். 2011இல் ஹமாஸிடம் கைதியாக இருந்த இஸ்ரேல் படை வீரர் கிலாத் ஷாலிட்டின் விடுதலைக்காக, இஸ்ரேல் பரிமாறிக் கொண்ட 1,047 பலஸ்தீன கைதிகளுடன் சேர்த்து விடுதலை செய்யப்பட்டார். கிலாத் ஷாலிட் 2006ஆம் ஆண்டு காசா எல்லையில் இடம்பெற்ற ஒரு மோதலில் பலஸ்தீன காசா போராளிகளால் கைது செய்யப்பட்டவர்.

கடந்த ஒரு தசாப்தத்தில் சின்வர் காசாவில் குறிப்பாக இராணுவ விவகாரங்களில் தனது செல்வாக்கை நிலை நிறுத்தியிருந்தார்.

இஸ்ரேல்

## இஸ்ரேல் – ஹமாஸ் போர்: 2 நாட்கள் நிறுத்த

# எகிப்து பரிந்துரை

நான்கு பிணைக் கைதிகளை திரும்பப் பெறுவதற்கான போர் நிறுத்தத்தை, எகிப்து பரிந்துரை செய்துள்ளது.



இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையில் போர் நடைபெற்று வருகிறது. இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு, எகிப்து மத்தியஸ்தரகாக செயற்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு வாரம் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதன்போது, 100க்கும் மேற்பட்ட பிணைக் கைதிகளை விடுவிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் போர் நிறுத்தம் ஏற்படவில்லை. தற்போது வரை சுமார் 100 பிணைக்கைதிகள் ஹமாஸிடம் உள்ளனர். கடந்த வாரம் இஸ்ரேல்-காசா இடையே போர் நிறுத்தம் ஏற்பட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், நான்கு பிணைக் கைதிகைள திரும்பப் பெறுவதற்கான போர் நிறுத்தத்தை எகிப்து பரிந்துரை செய்துள்ளது.

இந்த நான்கு பிணைக் கைதிகளை திரும்பப்பெற இரண்டு நாட்கள் போர் நிறுத்தத்துக்கு பரிந்துரை செய்துள்ளது.

குறித்த நான்கு பிணைக்கைதிகளுக்காக இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவிக்க வேண்டும். இரு தரப்பிலும் இந்த பரிந்துரை ஏற்கப்பட்டால், அந்த நான்கு பிணைக்கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள்.

சவூதி அரேபியா

## சட்டவிரோத குடியேற்றம்

### தீவிரமாக கண்காணிக்கும் சவூதி

சவூதி அரேபியாவுக்குள் சட்ட விரோதமாக குடியேறுபவர்களை கட்டுப்படுத்த, அந்த நாட்டு அரசாங்கம் எல்லை பகுதிகளை தீவிரமாக கண்காணிப்பதாக தெரியவந்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் ஏராளமானோர் ஐரோப்பா மற்றும் அரபு நாடுகளுக்கு அகதிகளாக குடியேறுகின்றனர்.

அவ்வாறு செல்லும்போது பெரும்பாலும் அவர்கள் சட்ட விரோத பயணத்தையே மேற்கொள்கின்றனர். இந்நிலையில், சவூதி அரேபியாவுக்குள் சட்ட விரோதமாக குடியேறுபவர்களை கட்டுப்படுத்த அந்த நாட்டு அரசாங்கம் எல்லை பகுதிகளை தீவிரமாக கண்காணிக்கிறது.

அந்தவகையில், கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் சட்ட விரோதமாக குடியேறியதாக 20 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

அவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலும், சட்ட விரோதமாக குடியேறியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக 24 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.



இந்தோனேசியா

## 'மராபி' எரிமலை வெடித்தது



இந்தோனேசியாவில் உள்ள 'மராபி' எரிமலை, ஞாயிற்றுக்கிழமை (27) பாரிய சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதன்போது, சுமார் 6 ஆயிரத்து 500 அடி உயரத்துக்கு கரும்புகை வெளியேறியது. இதனால், அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சியளித்தது.

இதையடுத்து, குறித்த எரிமலையை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

மேற்கு சுமத்ரா மாகாணத்தில் உள்ள அகம் மாவட்டத்தில் 9,480 அடி உயரம் கொண்ட 'மராபி' எரிமலை திடீர் வெடிப்புகளுக்கு புகழ்பெற்றதாகும்.

தமிழ் நாடு

## மாநாட்டில்

# மயங்கி விழுந்தவர் பலி

நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநில மாநாட்டில் கலந்துகொண்ட தொண்டர்களில் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாநாடு முடிந்த நிலையில், கட்சி தொண்டர்கள் ஒரே நேரத்தில் மாநாட்டு திடலை விட்டு வெளியேற முற்பட்டனர். அப்போது, அங்கிருந்த தண்ணீர் தாங்கிகள் மற்றும் இருக்கைகளை அடித்து உடைத்துள்ளனர்.

மேலும், பெரும் திரளானோர் ஒரே நேரத்தில் வெளியேற முயன்றதால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் ஒருவர் மயங்கி விழுந்து நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.




திருப்பதி

# திருப்பதியில் வெடிகுண்டு மிரட்டல்

திருப்பதியில் உள்ள வராஹ சுவாமி கோவில், இஸ்கான் கோவில் மற்றும் 4 ஓட்டல்களுக்கு, ஞாயிற்றுக்கிழமை (27), வெடிகுண்டு மிரட்டல் விடுத்து கடிதம் வந்துள்ளது.

இதையடுத்து, பொலிஸார் திருப்பதியில் வராக சுவாமி கோவில் இல்லாததால் இஸ்கான் கோவில் மற்றும் தபாலில் தெரிவிக்கப்பட்டு இருந்த ஹோட்டல்களில் வெடிகுண்டு கண்டறியும் கருவி மற்றும் மோப்ப நாய்களுடன் சோதனை நடத்தியுள்ளனர்.

சோதனையில் வெடிகுண்டு எதுவும் மீட்கப்படவில்லை. இதனால் இந்த வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்துள்ளது.



தொடர் வெடிகுண்டு மிரட்டலால் திருப்பதியில் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் யாரும் வெடிகுண்டு மிரட்டல் குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை என, திருப்பதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்

# சமநிலையில் லிவர்பூல் ஆர்சனல் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

லிவர்பூல் சார்பாக வேர்ஜில் வான் டிஜிக், மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஆர்சனல் சார்பாக புகாயோ ஸாகா, மிகேல் மெரினோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது. பலஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜீன்-பிலிப் மடெடா பெற்றிருந்தார்.

இந்நிலையில் வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

## இத்தாலிய சீரி ஏ தொடர்

# சமநிலையில் இன்டர் ஜூவென்டஸ் போட்டி



இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(27) நடைபெற்ற ஜூவென்டஸூடனான போட்டியை 4-4 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் சமப்படுத்தியது.

இன்டர் சார்பாக பியோத்தர் ஸிலென்ஸ்கி இரண்டு கோல்களையும், ஹென்றிக் மிகித்திரயான், டென்ஸில் டம்ப்ஃபிறைஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜூவென்டஸ் சார்பாக கெனன் யில்டிஸ் இரண்டு கோல்களையும், டுஸன் விளாகோவிச், திமோதி வெயா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் பியொரென்டீனாவின் மைதானத்தில் திங்கட்கிழமை (28) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-5 என்ற கோல் கணக்கில் றோமா தோற்றது.

## பாக். பயிற்சியாளர் பதவியிலிருந்து

### கிறிஸ்டன் இராஜினாமா



பாகிஸ்தானின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தலைமைப் பயிற்சியாளர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இராஜினாமா செய்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளுக்கான பாகிஸ்தானின் பயிற்சியாளர் ஜேஸன் கிலெஸ்பி, கிறிஸ்டனின் பதவியில் பணியாற்றுவாரென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# பாகிஸ்தானின் அணித்தலைவராக றிஸ்வான்

பாகிஸ்தானின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைவராக மொஹமட் றிஸ்வான் நியமிக்கப்பட்டுள்ளார். உப அணித்தலைவராக சல்மான் அலி அக்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்.

பக்கர் ஸமன், இமாம்-உல்-ஹக், ஷடாப் கான், மொஹமட் ஹரிஸ் ஆகியோர் அவுஸ்திரேலியா, சிம்பாப்வேக்கெதிரான சுற்றுப்பயணங்களுக்கான குழாமில் இடம்பெறவில்லை.




அவுஸ்திரேலியத் தொடர்:

ஒருநாள் சர்வதேசப் போட்டி குழாம்: மொஹமட் றிஸ்வான் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), ஆமிர் ஜமால், அப்துல்லாஹ் ஷஃபிக், அக்ஹா சல்மான், அரஃபாத் மின்ஹாஸ், பாபர் அஸாம், பைஸல் அக்ரம், ஹரிஸ் றாஃப், ஹஸீபுல்லாஹ் கான் (விக்கெட் காப்பாளர்), இர்ஃபான் கான், கம்ரான் குலாம், மொஹமட் ஹஸ்னைன், நசீம் ஷா, சைம் அயூப், ஷகீன் ஷா அஃப்ரிடி.

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி குழாம்: மொஹமட் றிஸ்வான் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), அப்பாஸ் அஃப்ரிடி, அக்ஹா சல்மான், அரஃபாத் மின்ஹாஸ், பாபர் அஸாம், ஹரிஸ் றாஃப், ஹஸீபுல்லாஹ் கான் (விக்கெட் காப்பாளர்), இர்ஃபான் கான், ஜஹன்டட் கான், நசீம் ஷா, ஓமைர் யூசுஃப், சஹிப்ஸடா பர்ஹான், ஷகீன் ஷா அஃப்ரிடி, சுஃபியான் முகீம், உஸ்மான் கான்.

சிம்பாப்வே தொடர்:

ஒருநாள் சர்வதேசப் போட்டி குழாம்: மொஹமட் றிஸ்வான் (அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), ஆமீர் ஜமால், அப்துலாஹ் ஷஃபிக், அப்ரார் அஹ்மட், அக்ஹா சல்மான், அஹ்மட் டனியால், பைஸல் அக்ரம், ஹரிஸ் றாஃப், ஹசீபுல்லாஹ் கான் (விக்கெட் காப்பாளர்), இர்ஃபான் கான், கம்ரான் குலாம், மொஹமட் ஹஸ்னைன், சைம் அயூப், ஷஹ்னவாஸ் டஹானி, தயீப் தஹிர்.

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி குழாம்: அக்ஹா சல்மான் (அணித்தலைவர்), அப்பாஸ் அஃப்ரிடி, அஹ்மட் டனியால், அரஃபாத் மின்ஹாஸ், ஹரிஸ் றாஃப், ஹசீபுல்லாஹ் கான் (விக்கெட் காப்பாளர்), இர்ஃபான் கான், ஜஹன்டட் கான், மொஹமட் ஹஸ்னைன், ஓமைர் யூசுஃப், குவாசிம் அக்ரம், சஹிப்ஸடா பர்ஹான், சுஃபியான் முகீம், தயாப் தஹிர், உஸ்மான் கான்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 29 ஒக்டோபர் 2024, இல.08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.